விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 29 சனிக்கிழமை (13.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
ஆங்கிலம்- I, II

உள்ளே...

# காணாமல்போனோர் பணியகம் முப்படையினரை பாதுகாக்கும்!

## தண்டிக்கமாட்டோம் என்கிறார் அமைச்சர் சமரசிங்க



(கொழும்பு)

காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகம் சம்பந்தமான சட்டமூலத்தினால் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் கௌரவம் பாதுகாக்கப்படுமேயன்றி அவர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள் என திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

காணாமல்போனவர்கள் அலுவலகம் சம்பந்தமான சட்டமூலத்தால் பாது

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயக்குமாரிக்கு மீள் ரி.ஐ.டியினர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளை மீளுருவாக்கும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த திருமதி பாலேந்திரன் ஜெயக்குமாரி மீண்டும பயங்கரவாத் குற்றத்தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி) விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் அரசியல் கைதிகள் சிலரை புனர்வாழ்வுக்கு உட்படுத்த தீர்மானம்



(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் சிலரின் குற்றப்பத்திரத்திலுள்ள குற்றச்சாட்டுகளை குறைத்து அவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டமா அதிபர் உறுதியளித்துள்ளார் என்று சிறைச்சாலைகள்

23ஆம் பக்கம் பார்க்க....

## முதலீட்டாளர்கள் சம்மேளன தொடக்க அமர்வு யாழில்!

## வடக்கு ஆளுநர் கூரே தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் முதலீட்டாளர்கள் சம்மேளனத்தின் தொடக்க

பிரிவினரால் (ரி.ஐ.டி) விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....




நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பிலேயே அமைச்சர் இதனைக் குறி ப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிடு

கம் சம்பந்தமான சட்டமூலத்தால் பாது

23ஆம் பக்கம் பார்க்க....

# முதலீட்டாளர்கள் சம்மேளன தொடக்க அமர்வு யாழில்!

## வடக்கு ஆளுநர் கூரே தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் முதலீட்டாள ர்கள் சம்மேளனத்தின் தொடக்க அமர்வு இம்மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் மாவட்ட செய லகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கில் வேலைவாய்ப்புக்களை

23ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் அரசியல் கைதிகள் சிலரை புனர்வாழ்வுக்கு உட்படுத்த தீர்மானம்



(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் சிலரின் குற்றப்பத்திரத்தி லுள்ள குற்றச்சாட்டுகளை குறைத்து அவர்களை புனர்வாழ்வுக்கு உட்ப டுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும் என சட்டமா அதிபர் உறுதியளி த்துள்ளார் என்று சிறைச்சாலைகள்

23ஆம் பக்கம் பார்க்க....

# காணாமல்போனோர் பணியகம்; இலங்கைக்கு அமெரிக்கா பாராட்டு

(நியூயோர்க்)

இலங்கை அரசாங்கத்தால் காணாமல்போனோர் பணியகம் ஒன்றை அமைப்பது தொடர்பான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை க்கு அமெரிக்கா பாராட்டுத் தெரிவித் துள்ளது.


காணாமல்போனோர் பணிய கத்தை அமைப்பது தொடர்பான சட்டமூலம் நேற்று முன்தினம் வியா ழக்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்தை நிறை வேற்றவிடாமல் தடுப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணியினர் பாரிய முயற்சிகளை மேற்கொண்டிருந்த நிலையில், இந்த சட்டமூலம் திருத்தங்களுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்ப ட்டது.

இந்நிலையில், அரசாங்கத்தின்

24ஆம் பக்கம் பார்க்க....

## தங்க வேட்டையில் மைக்கல் பெல்ப்ஸ்



(ரியோ)

ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் 22ஆவது தங்கம் வென்று அசத் தினார் அமெரிக்காவின் புயல்

23ஆம் பக்கம் பார்க்க....

# சர்வதேச விசாரணையை கோரி ஆனையிறவிலிருந்து நடை பயணம்

(கிளிநொச்சி)

ஈழத் தமிழர்கள் மீதான இனப் படுகொலைக்கு நீதி கேட்டும் சர்வ தேச விசாரணையை வலியுறுத்தி யும் தமிழர் தாயகத்தில் மேற்கொள் ளப்பட்டு வரும் சிங்கள பௌத்தமய மாக்கலை எதிர்த்தும் தமிழ் அரசி யல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தக் கோரியும் நீதிக்கான நீண்ட நடைப்பயணத்திற்கான அழைப்பை கிளிநொச்சி கிராம மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்க ங்களின் சமாசமும் பொது அமைப் புக்களின் ஒன்றியமும் இணைந்து

23ஆம் பக்கம் பார்க்க....

# மீள்குடியேற்ற பணிகளை துரிதப்படுத்த சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம்

## நோர்வே பிரதமரிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவரு மான இரா.சம்பந்தன், நோர்வே பிரதமருக்கு எடு த்துரைத்துள்ளார்.


மீள்குடியேற்றம், படையினர் வசமுள்ள பொது மக்களின் காணி விடுவிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் துரித படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்திய இரா. சம் பந்தன், குறித்த செயற்பாடுகளில் சர்வதேசத்தின் பங்களிப்பும் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை

23ஆம் பக்கம் பார்க்க....



# மகிந்த அணி ஆர்ப்பாட்டம்



24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# "நான்" உளவியல் சஞ்சிகை

## 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு...

**சிந்தனைப்போட்டி**

1. சுமூகமான தொடர்பாடலில் செவிமடுத்தலின் தாக்கம்.
2. இன்றைய இளைஞர்களின் வாழ்வியல் வழிகாட்டலை விழுமியக் கல்வியை மேம்படுத்த வழிகள் (300 சொற்களுக்கு குறையாது 28.08.2016 முன் எழுதுங்கள்)

* 28.08.2016ல் நடைபெறவுள்ள எழுத்தாளர் பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் 22.08.2016க்கு முன் விண்ணப்பியுங்கள்.
* "நான்" சஞ்சிகை உங்கள் இல்லங்களில் வேண்டுமா? ஆண்டு சந்தா ரூ.250.00னை கட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு :-** "நான்" உளவியல் சஞ்சிகை
வசந்தகம், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

(5586)


மதுபோதை மற்றும் உரிய ஆவணமின்மை

# வாகன சாரதிகள் 7 பேருக்கு தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி, தருமபுரம், பரந்தன் ஆகிய பகுதிகளில் வீதி ஒழுங்கு விதிகளை மீறியும் மது போதையிலும் உரிய ஆவணங்கள் இன்றியும் வாகனங்களைச் செலுத்திச் சென்ற ஏழு பேருக்கு எதிராக ஐம்பத்து ஒன்பதாயிரத்து 500 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிளிநொச்சிப் பகுதியில் வரிப்பத்திரம, காப்புறுதிப்பத்திரம், சாரதியனுமதிப்பத்திர மினறியும் மது போதையிலும் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றவருக்கு 14 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின கீழ் ஏழு நாட்கள சமூக சேவையில் ஈடுபடுமாறும உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு ஐயாயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் 21 நாட்களுக்கு சாரதியனுமதிப்பத்திரத்தினை இடைநிறுத்தி வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தருமபுரம் பகுதியில் மதுபோதையிலும் சாரதியனுமதிப்பத்திரமின்றியும் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு தலா பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒருவார காலம் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் வரிப்பத்திரமின்றி பேருந்து செலுத்தியவருக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றவருககு ஐயாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் ஏழு நாட்கள் சமூகசேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டதுடன் சாரதியனுமதிப்பத்திரத்தினை இரண்டு வார காலத்திற்கு இடைநிறுத்தி வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. பரந்தன் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 12 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்களை கைது செய்து இவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து குறித்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்களை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றல் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முனனிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து மேற்படி தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (செ-15)


# INVITATION FOR BIDS

# JAFFNA MUNICIPAL COUNCIL

1.The Chairman Local Authority Procurement Committee on behalf of the Municipal Council, Jaffna Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Construction & Improvement works described in the table below.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of Building, Road Construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD)

4. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the schedule (section 5) of the bidding document .

5. Interested bidders may obtain further information from the **Commissioner, Municipal Council Jaffna. (T.No.: 021-2216468 / Fax: 0212222334)** on any working day from **0900hrs to 1400 hrs from 16 August 2016.**

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Commissioner, Municipal Council, Jaffna from 16 August 2016 until 05 September 2016 from 0900 hrs to 1400 hrs upon payment of a non - refundable fees of Rs. 2000.00+VAT.** The method of payment should be by cash.

7. Bids shall be delivered to the address below **The Commissioner, Municipal Council, Jaffna on or before 1400 hrs on 05 September 2016.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders representatives who choose to attend.

8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Se. no | Bid No | Description of Work | Engineer's Estimated Cost / (Rs in million) | Estimated Cost with all Taxes / (Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Valid Period |
| 1 | JMC/WD/01/CF.Bu/ 2016/61 | Construction of Fire Brigade Office Building Stage - II | 4.558 | 5.180 | 3 Months | C 8 or above | 90,000.00 | 91 days(till 04.12.2016) |
| 2 | JMC/WD/01/CF.Rd/ 2016/62 | Improvement of Kamal Lane | 1.415 | 1.600 | 3 Months | C 9 or above | 28,000.00 | 91 days(till 04.12.2016) |
| 3 | JMC/WD/01/CF.Rd/ 2016/63 | Improvement of Notharish Lane | 1.642 | 1.850 | 3 Months | C 9 or above | 33,000.00 | 91 days(till 04.12.2016) |
| 4 | JMC/WD/01/CF.Rd/ 2016/64 | Improvement of M.O Lane | 0.586 | 0.660 | 3 Months | C 9 or above | 11,000.00 | 91 days(till 04.12.2016) |
| 5 | JMC/WD/01/CF.Rd/ 2016/65 | Improvement of Koiyathoddam puthu Veethy 1st Lane & Palkulam Lane | 1.347 | 1.520 | 3 Months | C 9 or above | 27,000.00 | 91 days(till 04.12.2016) |

9. Pre bid meeting will be held **at 10.00 hrs on 26 August 2016** in the Municipal Council Building , Jaffna. interested bidders may attend the pre-bid meeting at their own expenses.

***Chairman, Local Authority Procurement Committee,***
***Municipal Council, Jaffna,***
***Northern Province.***

***13.08.2016***

(C-5435)


# இழப்பீடு செலுத்திய இராணுவ சிப்பாய்

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இரவு வேளை வீடு புகுந்து கோழி திருடிய இராணுவச்சிப்பாய் ஒருவர் மூவாயிரம் ரூபாய் இழப்பீடு செலுத்தியுள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அண்மையில் இரவுவேளை காணி ஒன்றுக்குள் புகுந்து வீட்டில் வாழ்வாதாரத்தேவைக்கு வளர்க்கப்பட்ட கோழியினை திருடியபோது வீட்டின் உரிமையாளர்கள் கூச்சலிட்டதையடுத்து ஊர்மக்கள் திரண்டு குறித்த இராணுவச்சிப்பாயினை துரத்திச் சென்ற சமயம் குறித்த சிப்பாய் இராணுவக் காவலரணுக்குள் புகுந்து கொண்டதையடுத்து பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதையடுத்து குறித்த சிப்பாய் கைது செய்யபபட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆயர்படுத்தப்பட்ட நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் தவணையிடப்பட்டநிலையில் எதிராளியான குறித்த இராணு வச்சிப்பாய் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்ததுடன் வழக்கினை இழப்பீடு பெற்று இணங்கி செய்வதற்கு முறைப்பாட்டாளர் விருப்பம் தெரிவித்ததையடுத்து குறித்த சிப்பாய் மூவாயிரம் ரூபாய் இழப்படு செலுத்தியுள்ளார். (செ-15)

# மண் அகழ்வு தண்டம் விதிப்பு


கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் மண் அகழ்வில் ஈடுபட்ட கனரக வாகனம் மற்றும் மண் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய நால்வருக்கு 31 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி கனரக வாகனத்தை பயன்படுத்தி மண் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்களையும் கனரக வாகனத்தையும் கைது செய்த கிளிநொச்சிப் பொலிசார் குறித்த நான்கு பேரையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜரபடுத்தியதையடுத்து குறித்த உழவு இயந்திரங்களுக்கு தலா ஏழாயிரம் ரூபாய் வதம் இருபத்து ஓராயிரம் ரூபாய் தணடப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கனரக வாகனத்தைப் பயன்படுத்தி மண் அகழ்வில் ஈடுபட்டவருக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறித்த குற்றச்சாட்டில் ஈடுபட்ட நால்வருக்கும் 31 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (செ-15)

# நீர் மின் உற்ப்பத்தி, மீன்பிடி, தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு நோர்வே தொழில்நுட்ப உதவி





நாட்டின் நீர் மின்சார உற்பத்தி, மீன்பிடித்துறை மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறையை முன் னேற்றுவதற்கு தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த கோரிக்கைக்கு நோர்வே பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நோர்வே பிரதமர் எர்னா சோல்பேர்க் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவ லத்தில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவை சந்தித்தபோதே இந்த இணக்கத்தை தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த நோர்வே பிரதமர் சோல்பேர்க்கை ஜனாதிபதி வரவேற்றதுடன், இரு தலைவர்களுக்குமிடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை ஒன்றும் இடம்பெற்றது.

இலங்கைக்கும் நோர்வே அரசாங்கத்திற்குமிடையே இருந்துவரும் வரலாற்று ரீதியான நட்புறவு தொடர்பாக் நினைவுகூர்ந்த தலைவர்கள் இரு நாடுகளுக்கிடையேயான இத்தொடர்புகளைமேலும் பலப்படுத்துவது தொடர்பாக விரிவாக கலந்துரையாடியதோடு, இரு நாடுகளுக்கிடையேயும் புதிய உறவுகளை கட்டியெழுப்புவதற்கு இச்சந்திப்பு ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்றும் தெரிவித்தனர். தற்போதைய அரசாங்கம் நல்லிணக்கம், ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தி தெரிவித்த நோர்வே நாட்டின் பிரதமர், இலங்கையின் இயற்கை எழில் மற்றும் உபசரிப்பு தொடர்பிலும் மகிழ்ச்சி வெளியிட்டார். நோர்வே நாட்டின் பிரதான சுற்றுலா மத்திய நிலையமாக இலங்கையை ஆக்குவதற்கு தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# 5300 கோடி ரூபா நிதிமோசடி அம்பலம்

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

***நிதி மோசடி தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற 52 முறைப்பாட்டுக் கடிதங்கள் தொடர்பில் இதுவரை மேற்கொண்ட விசாரணைகளில் 5300 கோடி ரூபா நிதி மோசடி பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.***

எப்.சி.ஐ.டியிற்கு இதுவரையில் 306 முறைப்பாட்டுக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் 52 கடிதங்களே விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு நிறைவு செய்யப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் 11 விடயங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் பாரிய குற்றச்சாட்டுக்களுக்கான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சி.என்.என். தொலைக்காட்சி சேவையில் அரசுடைமையாக்கப்பட்ட 15 கோடி ரூபா நிதியும், இதில் உள்ளடங்குபவையாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## மலேசியாவில் தமிழ்ப்பெண் சபாநாயகராக தேர்வானார்



மலேசியாவில் தமிழ்ப் பெண் சபாநாயகராகினார். உலகில் முதன் முறையாக ஒரு நாட்டின் பாராளுமன்றத்தில் தமிழ்ப் பெண்மணி சபாநாயகர் ஆகியுள்ளார்.

திருமதி எஸ். தங்கேஸ்வரி நேற்று மலேசிய நாட்டின் பாராளுமன்றத்தில் சபாநாயகராக பதவி ஏற்றார். (இ-5)

## தாய் சேய் மரணவீதம் குறைவடைந்துள்ளது

இலங்கையில் தாய்சேய் மரணவீதம் குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். தாய்சேய் இறப்பினைக் குறைக்க இலங்கையின் விசேட சிறுவர் வைத்தியர்கள் சிறந்த முறையில், அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். காலிமுகத்திடல்ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற இலங்கை சிறுவர் விசேட வைத்தியர் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தின் ஆரம்பவிழாவில் கலந்துகொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார். இதேவேளை தற்போதைய இளைய தலைமுறையினரின் சுகாதாரத்தை பாதுகாக்க வைத்தியர்களின் பங்களிப்பு அளப்பரியது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)


## அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் இலங்கைக்கு இரண்டு நாட்கள் விஜயம்



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்காக உதவிச் செயலர் சாள்ஸ் எச்.றிவ்கின் இரண்டு நாட்கன் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு வந்துள்ளார். இவரை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் வரவேற்றார்.

இலங்கையுடன், வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிக்கும் நோக்கிலேயே சாள்ஸ் எச்.றிவ்கின் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## அமெரிக்க, இலங்கை ஆயுதப்படைகளுக்கிடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடல்





இலங்கை- அமெரிக்க ஆயுதப்படைகளுக்கு இடையில் முதலாவது செயல்மட்ட இருதரப்பு பாதுகாப்புக் கலந்துரையாடல், கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இரண்டு நாட்கள் கொழும்பில் நடத்தப்பட்டன.

இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் கடந்த 8 மற்றும் 9ஆம் நாட்களில் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில், அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப்பீடத்தின் பல்வேறு படைப்பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை தரப்பில், பாதுகாப்பு அமைச்சு, கூட்டுப்படைகளின் தலைமையகம், முப்படைகளின் தலைமையக அதிகாரிகள் இந்தப் பேச்சுக்களில் பங்கெடுத்தனர்.


செயற்பாட்டு மட்டத்தில் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பாக இரு நாடுகளினதும் ஆயுதப்படைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட முதலாவது கலந்துரையாடல் இதுவாகும்.

அமெரிக்க- இலங்கை ஆயுதப்படைகளுக்கு இடையில், இருதரப்பு பயிற்சிகள், ஒத்திகைகளை நடத்துவ தற்கு, 2016ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான அட்டவணையை வரைவதே இந்தப் பேச்சுக்களின் நோக்கமாகும் (இ-7-10)

# எரிபொருள் நிரப்பியவேளை

# திடீர் தீ விபத்து

## இரு மோ. சைக்கிள்கள் எரிந்து நாசம்



(கோப்பாய்)

உரும்பிராய் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு எரிபொருள் நிரப்பிக்கொண்டிருந்த போது திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இவ் விபத்தின்போது அங்கு நின்ற இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எரிந்து நாசமாகியுள்ளன. மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, எம்.பி 90 ரக மோட்டார் சைக்கிள் ஒன்றில் நபர் ஒருவர் பலசரக்கு பொதிகள் உட்பட பல பொதிகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிய நிலையில் வாகனத்தின் முன்பகுதியில் வைத்து கட்டப் பட்டிருந்த கொள்கலன் ஒன்றில் எரிபொருள் நிரப்பியுள்ளார். அப்போது அவர் அருகில் மற்றொரு நபர் பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் எரிபொருள் நிரப்புவதற்காக வந்துள்ளார்.

அப்போது கொள்கலனில் எரிபொருள் நிரப்பிக்கொண்டிருந்த வேளை திடீரென தீப்பற்றியுள்ளது. எம்.பி90 மோட்டார் சைக்கிளில் நின்ற நபர் தனது பாதுகாப்புக்காக மோட்டார் சைக்கிளை தள்ளிவிட்டு பாய்ந்து ஓடியபோது கொள்கலனில் இருந்த பெற்றோலில் தீ பலமாக பற்றி அருகில் இருந்த பல்சர் மோட்டார் சைக்கிளும் தீப்பற்றி எரிய ஆரம்பித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நின்ற ஏனையோர் பாய்ந்து ஓடியதனால் தெய்வாதீனமாக பெரும் அனர்த்தம் எதுவும் ஏற்படாத போதும் எம்.பி90 ரக மோட்டார் சைக்கிள் முற்றிலும் எரிந்ததுடன் மோட்டார் சைக்கிளில் இருந்த பலசரக்குப் பொருட்களும் எரிந்து நாசமாகின. அத்தோடு அருகில் இருந்த பல்சர் ரக மோட்டார்சைக்கிளும் தீயினால் எரிந்து பலத்த சேதம் அடைந்துள்ளது. உடனே எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களால் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் தண்ணீர் ஊற்றப்பட்டு தீ அணைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பாதுகாப்பு உபகரணங்கள் இருந்த போதும் அவை உரிய இடத்தில் இல்லாததுடன், அங்குள்ள ஊழியர்களுக்கு அதனை இயக்குவதற்கும் தெரியவில்லை என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

பல்சர் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் எரிபொருள் நிரப்பு நிலையத்தவர்களுடன் தமக்கு புதிய மோட்டார் சைக்கிள் வேண்டும் என்று வாய்த்தர்க்கத்தில் ஈடுபட உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சேதமடைந்த மோட்டார் சைக்கிள்களை பொலிஸ் நிலையம் கொண்டு சென்று மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத் தீ விபத்தினால் நேற்றுக் காலை உரும்பிராய் எரிபொருள் நிரப்பு நிலையப் பகுதி சற்றுப் பரபரப்புடன் காணப்பட்ட தையும் அவதானிக்க முடிந்தது. (செ-87)

# ரியோ ஒலிம்பிக்கில் அமெரிக்கா ஆதிக்கம்

ரியோ ஒலிம்பிக்கில் அமெரிக்கா 16 தங்கம் உட்பட 39 பதக்கங்களுடன் முதல் இடத்தில் உள்ளது. போட்டியை நடத்தும் பிரேசில் 21-வது இடத்தில் உள்ளது.

தென்அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டில் 'ஒலிம்பிக் 2016' தொடர் 'ரியோ ஒலிம்பிக்' என்ற பெயரில் கடந்த 5-ந்தேதி தொடங்கியது.

நேற்று 7-வது நாள் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 7-வது நாள் தொடக்கத்தில் பதக்க பட்டியலில் அமெரிக்கா 16 தங்கம், 12 வெள்ளி மற்றும் 11 வெண்கல பதக்கங்களுடன் முதல் இடத தை பிடித்துள்ளது.

Rio2016

சீனா 11 தங்கம், 8 வெள்ளி, 12 வெண்கலத்துடன் 2-வது இடத்தில் உள்ளது. ஜப்பான 7 தங்கம், 2 வெள்ளி மற்றும் 13 வெண்கலத்துடன் 3-வது இடத்தில் உள்ளது. போட்டியை நடத்தும் பிரேசில் தலா ஒரு பதக்கங்களுடன் 21-வது இடத்தில் உள்ளது. (க)


# சானியா மிர்சா – ரோஹன் காலிறுதி சுற்றுக்கு தகுதி

ரியோ ஒலிம்பிக் டென்னிஸ் தொடரில் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, ரோஹன் போபண்ணா ஜோடி காலிறுதி சுற்றுக்கு தகுதிப்பெற்றுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவீல் நடந்த முதல் சுற்றில் சானியா, போபண்ணா ஜோடி, அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர், ஜான் பியர்ஸ் ஜோடியை சந்தித்தது.

1 மணிநேரம் 13 நிமிடங்கள் நடந்த ஆட்ட த்தின் முடிவில் இந்திய ஜோடி 7-5, 6-4 என்ற நேர் செட் கணக்கில் அவுஸ்திரேலிய ஜோடியை வென்று காலிறுதி சுற்றுக்கு தகுதிப் பெற்றது.

காலிறுதி சுற்றில் இந்திய ஜோடி, பிரித்தானி யாவன் ஹீத்தர் வோட்சன், அண்டி முரே ஜோடி யுடன் மோதுகிறது.



முன்னதாக, ரியோ ஒலிம்பிக் டென்னிஸ் தொடரில ஆண்கள் மற்றும் மகளீர் பிரிவில் களமிறங்கிய இந்திய வீரர்கள் முதல் சுற்றிலேயே வெளியேறி ஏமாற்றினர்.

தற்போது கலப்பு இரட்டையர் பிரிவு காலிறு திக்கு தகுதிப்பெற்றுள்ள சானியா, போபண்ணா ஜோடி பதக்கம் வெல்லும் என பெரிதும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. (க)

# நோயாளர் விடுதியில் தங்கியிருந்த பெண் ஒருவர் மீது தாக்குதல்

## கணவன் பொலிஸாரால் கைது!

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் தங்கியிருந்த பெண் ஒருவர் மீது அவரது கணவன் விடுதிக்குள் புகுந்து தாக்குதல் மேற்கொண்டமையால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தனது பிள்ளை ஒருவருக்கு காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அவரை அனுமதித்த மேற்படி தாயார் அப்பிள்ளையுடன் வைத்தியசால்லையில் தங்கி நின்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை வைத்தியசாலைக்கு வந்த அப்பெண்ணின் கணவர் திடீர் எனப் பாய்ந்து மனைவி மீது தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சிறிது நேரம் கழித்து மீண்டும் மனைவி மீது தாக்குதல் நடத்துவதற்கு வந்தபோது அவர் அப்பெண்ணின் உறவினர்கள் மற்றும் வைத்தியசாலை தரப்பினரால் பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் அறிந்து வைத்தியசாலைக்குச் சென்ற பருத்தித்துறைப் பொலிஸார் அந்நபரைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்மணற்காடுகுடத்தனையைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

# பெண்களுக்கான நீச்சல் போட்டி 2 வீராங்கனைகள் தங்கம்

ரியோ ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 100 மீட்டர் பிரீஸ்டைல் நீச்சல் போட்டியில் 2 வீராங்கனைகள் தங்கப்பதக்கம் வென்றனர்.

இதில் அமெரிக்காவின் சிமோன் மானுவே, கனடா வீராங்கனை பென்னி ஜாலகஸ்கே இருவரும் பந்தய தூரத்தை சரியாக 52.70 வினாடியில் கடந்து தங்கப்பதக்கத்தை கைப்பற்றினர். இதனால் இருவருக்கும் முதல் இடம் வழுங்கி தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

2 பேர் தங்கம் வென்றதால் வெள்ளி பதக்கம வழங்கப்படவில்லை. வெண்கல பதக்கத்தை சுவீடனை சேர்ந்த சாரா ஜேர்ஸ்ரோம் வென் றார்.

இதேபோல், எப்போதாவது ஒருமுறை




தான் ஒலிம்பிக்கில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

# ரியோ ஒலிம்பிக்கில் சீன வீராங்கனை ஊக்கமருந்து பயன்படுத்தியது கண்டுபிடிப்பு

ரியோ ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட சீன நீச்சல் வீராங்கனை ஊக்க மருந்து பயன்படுத்தியது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பிரேசில் தலைநகர் ரியோவில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஆயிரக கணக்கான வீர வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இவர்களின் ரத்தம் மற்றும் சிறுநீர் ஆகியவற்றை அந்தந்த நாட்டு ஒலிம்பிக் அமைப்பு மற்றும் விளையாட்டுக்கான அமைப்பு பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளும்.

அதன்படி சீன நாட்டின் 18 வயது வீராங்கனை சென் ஜின்யி பெண்களுக்கான 100 மீட்டர் பட்டர்பிளை பிரிவில் கலந்து கொண்டார். தகுதிச் சுற்றில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு நுழைந்தார்.

இறுதிப் போட்டியில் நான்காவது இடம் பிடித்து பதக்க வாய்ப்பை இழந்தார். இவரது சிறுநீர் மாதிரியை சீன நீச்சல் அசோசியேசன்ஸ் பரிசோதனை செய்தது. அதில் சென் 'ஹைட்ரோகுளோரோதயஸைட்' என்ற தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத் தியது தெரியவந்தது.

சென் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் தனது 'பி' மாதிரி முடிவை கேட்டுள்ளார். இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (க)



# இலங்கை - அவுஸ்திரேலியா 3ஆவது டெஸ்ட் இன்று

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதுவரை நடைபெற்று முடிந்துள்ள இரண்டு போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்று 2-0 எனத் தொடரை கைப்பற்றி முன்னிலையில் உள்ளது.

முதல் போட்டி நடைபெற்ற பல்லேகலே மற்றும் 2-வது போட்டி நடைபெற்ற காலி ஆகிய இரண்டு ஆடுகளங்களும் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான வகையில் அமைக்கப்பட்டிருந்தது. இதனால் அவுஸ்திரேலிய இரண்டு போட்டிகளிலும் படுதோல்வி அடை ந்தது.

இந்நிலையில் இன்று 3-வது போட்டி கொழும்பில் உள்ள எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற இருக்கிறது. போட்டியானது இலங்கை நேரப்படி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (க)

# மூன்று ஆண்டுகளில் 187 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய ஜனாதிபதி

இலங்கையில். கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்த 187 கைதிகளுக்கு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாத்திலக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஜயந்த சமரவீர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதில் வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ள கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது சம்பந்தமாக ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்கு நீதி அமைச்சரினால் ஓய்வுபெற்ற உச்சமன்ற நீதிபதிகள் இருவரின் தலைமையில் விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இந்த குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய 2015 ஆம் ஆண்டு 117 கைதிகளுக்கு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாக தெரிவித்த அமைச்சர் கருணாதிலக, 2016 ஆம் ஆண்டில் இதுவரை 70 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7-10)


**Sats-Tech Engineers**
மற்றும்
**Tv Lanka Digital Cable Less Televion**



நிறுவனத்தினர் இணைந்து வழங்கும்
**நல்லூர் கந்தனின்**
மஹோற்சவ கால விசேட சலுகை விற்பனை
தொலைக்காட்சி ரசிகர்களே!!!
ரூபாய் 4,999/-* செலுத்தி இணைப்பை பெற்றுக்கொள்ளுங்கள்.
2 வருடங்கள் எந்தவிதமான கட்டணங்களும் செலுத்த வேதவையில்லை.

**Rs. 4,999/-***

**2 year total free subscription**



சன் டிவி/ கே டிவி உட்பட 25 தமிழ் சானல்கள் மற்றும் விளையாட்டு/ சிறுவர் நிகழ்ச்சி / ஆங்கிலச்சானல்கள் / விஞ்ஞான சானல்கள் மொத்தம் 60 டிஜிட்டல் டிவி சானல்களை கண்டு களிக்க கூடிய அதி உயர் தொழில்நுட்ப முறையிலான கேபிள் இல்லா தொலைக்காட்சி சேவை மூலம் கண்டு களிக்க ஓர் அரிய வாய்ப்பு!

தொடர்புகளுக்கு :-
**SATS-TECH ENGINEERS**
NO 298 K.K.S ROAD JAFFNA
PHONE: 0212228812

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.



**யாரிடம் பேசுவது?**

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

*யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.*

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
**(021) 222 8117 / 077 900 8776**
(தினமும் காலை 9.00-1.00)

**வவுனியாவில்** **(024) 324 4444**
சனி, ஞாயிறு காலை 9.00—1.00

*(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)*
*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*


## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி கோரல்

யாழ்.மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருட்களை 2016.09.01- 2017.02.28 வரை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தினையும் செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளையில் 2016.08.15 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.08.29 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விபரத்தினைக் குறிப்பிட்டு "தலைவர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 2016.08.29 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**நுகர்வுப் பொருட்கள்**

- காகிதாதிகள், எழுது பொருட்கள்
- உணவு/ சிற்றுண்டி வகைகள்
- வாகன ரயர்கள்
- அலுவலக அடையாள அட்டை செய்தல்
- ரோணர் வகைகள்
- இறப்பர் முத்திரைகள்
- குடிநீர்/ பால்மா வகைகள்
- ஏனைய நுகர்வுப் பொருட்கள்

**இருப்புப் பொருட்கள்**

- வாகன பற்றரிகள்
- கணனிகள்
- போட்டோக்கொப்பி இயந்திரம்
- மல்ரி மீடியா புறஜெக்ரர்
- தளபாடங்கள்
- தொலைக்காட்சிப்பெட்டி
- மின்னிணைப்புப் பொருட்கள்
- ஹாட்வெயார் பொருட்கள்
- புகைப்படக் கருவிகள் (Camera)
- வளிபதனாக்கிகள் (A/C)
- இதர இருப்புப் பொருட்கள்

**கட்டடத் திருத்தம்**

- மாவட்டச் செயலக மேல்தளத்தில் அமைந்துள்ள ஆண்கள் மலசலகூட தொகுதித் திருத்தம்

**முக்கிய குறிப்பு:**

1. விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தங்களது வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கு மட்டுமே தாங்கள் கூறுவிலைகள் வழங்குதல் வேண்டும்.
2. பெறுகைக் குழுவினரால் தெரிவு செய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கட்டளை கிடைத்து இரு தினங்களுக்குள் பொருட்களை யாழ்.மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளையில் நேரடியாகவோ அல்லது முகவர் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் தங்களால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
3. பொருட்களை வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் வழங்குநர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருப்பின் அந்நிறுவனத்திற்கு யாழ்.மாவட்டத்தில் முகவரோ அன்றி விநியோகஸ்தரோ இருப்பது கட்டாயமானது. இதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(சி-5434)

**நா.வேதநாயகன்**
**மாவட்டச் செயலரும் அரசாங்க அதிபரும் யாழ்.மாவட்டம்**

# இராசி பலன்

13.08.2016
(ஆடி 29, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
தசமி பிற்பகல் 3.17 மணிவரை
கேட்டை முன்னிரவு 10.00 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பரணி, கார்த்திகை<br>இரவு 10.03 மணிக்கு<br>தனு-சந் | | சூரி |
| | | | ராகு<br>புத<br>சுக் |
| | சனி<br>செவ்<br>சந் | | குரு |

**மேடம்**
உங்கள் செயற்பாடுகளில் பெரியவர்கள் குறைகண்டு கூறலாம், பிரயாண பயமுண்டு, தேகநலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**இடபம்**
செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்**
சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்**
பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்**
உறவினர்கள் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், மனதில் தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கலாம்.

**கன்னி**
உங்களின் முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்**
தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை முடிப்பதில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகளை நாடுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்**
உங்கள் செயற்பாடுகளில் முன்னேற்றம் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையலாம்.

**கும்பம்**
உங்கள் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு

**மீனம்**
ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் அனுகூலமுண்டு, பகைவர்கள் விலகுவர்.



சின்மயாமிஷன், யாழ்ப்பாணத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் தற்காலிக அமைவிடத்தில் இயங்கி வந்தது. இந்நிலையில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்பக்கமாக பருத்தித்துறை வீதியில் யாழ். மாநகரசபை அலுவலகத்திற்கு முன்பாக சின்மயா மிஷனுக்கென நிரந்தர அமைவிடம் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தப் புதிய நிரந்தர அமைவிடத்தில் அங்குரார்ப்பண நிகழ்வானது அண்மையில் இடம்பெற்றது.

# நலன்புரி நிலைய மக்களுக்காக 981 வீடுகள் அமைக்கப்படும்

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ள 31 நலன்புரி நிலையங்களில் உள்ள 981 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கு 981 வீடுகள் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. இந்த வீட்டுத்திட்டமும் ஒரு மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு தொட்டி கையளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்பு தாங்கித்திட்டம் மக்களுக்கு மிக முக்கியமான அவர்களது குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டமாகும். மீள்குடியேற்ற அமைச்சினால் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்தில் மூவாயிரம் வீடுகள் உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலுள்ள மக்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் கண்காணிப்பில் மிக வேகமாக வெற்றிகரமாக அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது மகிழ்ச்சியான விடயம். அதேபோன்று தமிழ் நாட்டிலிருந்து திரும்பிய இலங்கை அகதிகள் 630 பேருக்கான வீடுகள் கட்டி கொடுப்பதற்கான முன்னேற்பாடுகள் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நடைபெறுகின்றது.

இதில் யாழ். மாவட்டத்திற்கு 140 வீடுகள் வழங்கப்பட்டு அவையும் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்கு என ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு இலட்சம் ரூபா உச்சமாக வழங்கப்படுகின்றது. இதில்மொத்தமாக வடக்கு மாகாணத்திற்கு 2 ஆயிரத்து 400 வீடுகள். அதில் யாழ். மாவட்டத்திற்கு 820 வீடுகள் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோன்று மற்றைய மலசல கூடங்களுக்கு அலகிற்கு 50 ஆயிரம் என்ற வகையில் மொத்தமாக 7 ஆயிரத்து 500 வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் அதில் குறிப்பாக யாழ். மாவட்டத்திற்கு ஆயிரத்து 200 மலசலகூட வசதிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வாழ்வாதார அபிவிருத்திக்கான வேலைத் திட்டத்தில் ஒரு இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு 12 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)


யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் 15.08.2016 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏல விற்பனையில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளைப் பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் மணலைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும்.

அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றைய தினம் உடனடியாகவே நீதிமன்ற வளாகத்தில் இருந்து அகற்ற வேண்டும் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ




கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு அண்மையில் பாடசாலையின் ஆ.சின்னத்தம்பி ஆசிரியர் நினைவரங்கில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் செல்லத்துரை பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் வட மாகாண சுகாதார அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தருமான கோபாலகிருஷ்ணன் கிருஸ்ணகுமார் கலந்து கொண்டார். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)




ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான Study An English என்னும் வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலக முன்னாள் பொறுப்பதிகாரி பொ.தங்கராசா பங்கேற்று நூலை வெளியிட்டு வைக்க வடமராட்சி கடலோடிகள் சங்கத்தலைவர் இ.குமரகுருசாமி நூலைப் பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் அ.சசி நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-பொற்பதி செய்தியாளர்)



வேல்ட் விசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட நாவிதன் வெளிக்கிராமத்திலுள்ள சிறுவர் கழகத்தினரின் யாழ்ப்பாணம் நோக்கிய நட்புமுறைப் பயணம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது இச் சிறுவர் கழகத்தினர் பொன்னாலை பாபுஜி முன்பள்ளிக்குச் சென்று சிரமதானப் பணியில் ஈடுபட்டதுடன் அராலி சரஸ்வதி மகாவித்தியாலத்திற்குச் சென்று அராலியில் உள்ள சிறுவர் கழகங்களுடன் சிறுவர் உறவுப் பரிமாற்ற நிகழ்வுகளிலும் கலந்து கொண்டதை படங்களில் காணலாம். (படங்கள்:பொ.சோபிகா)





வடமாகாணசபை உறுப்பினர் எஸ். அகிலதாஸ் மாகாண சபை ஊடாக தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து யாழ்.கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 14 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளாக ஆடு, கோழிகளை நேற்று கரவெட்டி கால்நடை வைத்தியசாலையில் வைத்து வழங்கினார்.

கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி கு.நர்மதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒரு பயனாளிக்கு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான நல்லின ஆடு ஒன்று வழங்கப்பட்டதுடன் மிகுதி 13 குடும்பங்களுக்கு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான 25 கோழிக்குஞ்சுகளும் கோழிக் கூடும் வழங்கப்பட்டன. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுசரணையில் பாற்பண்ணையாளர்களுக்கான வயல் விழா





பாற்பண்ணையாளர்களுக்கான வயல் விழா யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுசரணையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பண்டத்தரிப்பில் இடம்பெற்ற இவ்விழாவில் வடக்கு கால்நடைத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

வடக்கில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் யு.எஸ்.எயிட் நிறுவனம் பாற்பண்ணையாளர்களுக்கு பல்வேறு வசதிகளை வழங்கி வருகிறது.

குறிப்பாக, பசுக்களில் பால் சுரப்பைப் போசாக்கான உணவின்மூலம் அதிகரிக்கும் நோக்கில் சீனி இறுங்குப் பயிரைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து வருகிறது. அதிகளவு சீனியைக் கொண்ட சீனி இறுங்குப்பயிர் முழுவதுமாகவே கால்நடைத் தீவனமாகப் பயன்படவல்லது. இதனை இயந்திரங்களின் உதவியோடு நறுக்கி சீனி சேர்த்து நொதிக்க வைத்து 'சைலேஜ்' எனப்படும் பதப்படுத்திய உணவாக நீண்ட நாட்களுக்குச் சேமித்து வைத்துப் பயன்படுத்த முடியும்.

சீனி இறுங்கில் இருந்து கால்நடைத் தீவனம் தயாரிக்கும் முறை, கால்நடைத் தீவனமாக அசோலா தாவரத்தைப்பயன்படுத்தல்போன்ற செயன்முறை விளக்கங்கள் வயல் விழாவின்போது பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டதோடு, யு.எஸ்.எயிட் நிறுவனத்தால் பால் சேகரிக்கும் கொள்கலன்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் யு. எஸ். எயிட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் லிஸ்டேவ்னி ஈஸ்ரன், டேவிட்டையர், டாக்டர். பா.சிவயோகநாதன், வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர். சி.வசீகரன் ஆகியோரும் அதிக எண்ணிக்கையான பண்ணையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வயல் விழாவின் போது யாழ்கோ, நெஸ்லே ஆகிய நிறுவனங்கள் மற்றும் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தங்கள் காட்சிக் கூடங்களை அமைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இதழியல் அடிப்படைகள் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மூத்த இதழியலாளர் ஈ.ஆர். திருச்செல்வம் எழுதிய "இதழியல் அடிப்படைகள்" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெறும்.

வைத்தியர் வை.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையினை பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதற்பிரதியினை மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் பெற்றுக்கொள்வார்.

விசேட உரைகளை வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், யாழ்.தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் வி.அற்புதானந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதுடன் மதிப்பீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இயக்குநர் தே.தேவானந்த் நிகழ்த்தவுள்ளார். (இ

# 2016 இல் 12 ஆயிரம் சுற்றி வளைப்புமூலம் 57 மில்லியன் ரூபா அபராதமாக விதிப்பு

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள கட்டுப்பாட்டு விலைகளை மீறி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை சுற்றி வளைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ள நுகர்வோர் அதிகார சபையானது இந்த வருடத்தில் 56 மில்லியனை தண்டப்பணமாக வசூலித்துள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் 12 ஆயிரம் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டத்தை மீறி விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு நீதிமன்றம் ஊடாக வழக்கு தொடரப்பட்டு அதன்மூலமே குறித்த தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் அதிக தண்டப் பணத்தை செலுத்தியவர்கள் கொழும்பு நகர வர்த்தகர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7-10)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :-01, ஆதன இல:-135 (புதிய பதிவு)
வீதி:- குரங்கிழிப்பான் ஒழுங்கை
கிராமசேவையாளர் பிரிவு:- J/131 சாவற்கட்டு

வட்டாரம் 01, குரங்கிழிப்பான் ஒழுங்கை, ஆதன இல:- 135 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "குரங்கிழிப்பான்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 0.10 கொண்ட இவ்வாதனம் யாழ்ப்பாணம், சுதுமலை தெற்கு, சாவற்கட்டைச் சேர்ந்த இராசதுரை சிவஞா னரத்தினம் பெண் தவமலர் ஆகிய இவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா மன்மதராசா பெண் கலைவாணி என்பவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 11121 ஆம் இலக்க 11.04.2016 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு S. சுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 2782A ஆம் இலக்க 2016.07.09 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "குரங்கிழிப்பான்" நிலப்பரப்பு 02 குளி 0.10 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பத்திரிகை பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னராசா மன்மதராசா பெண் கலைவாணி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். (5600)

செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## கலந்துரையாடல்

வடமாகாணத்திலுள்ள முதியோர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கு முதியோர்களைப் பராமரிப்பது தொடர்பாகவும் முதியோர்களைப் பராமரிப்பதற்கான உத்திகளைத் தெரிந்து கொள்வதற்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளதுஎனகைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (இ-3-134)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:44செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4804 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 108செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/512 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 14சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: HNDM/அரச தொழில்<br>தொ.இ: B/4809 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 18<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/522 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 46செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/4821 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 12<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/524 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 23<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:B.Eng/பொறியியலாளர்<br>தொ.இ: B/4824 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc, MSc/போதனாசிரியர்<br>தொ.இ: G/529 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதையும் அறியத்தருகின்றோம்)

# பாலியாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

## அரசிடம் டக்ளஸ் வலியுறுத்து

வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கு நீர் வசதியை ஏற்படுத்துவதற்காக, மன்னார் மாவட்டத்தை அண்டியுள்ள பறங்கியாற்றிலிருந்து பாலியாற்றுக்கு நீரைத் தொடர்புபடுத்த வேண்டுமென, நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரம் முடிவடைந்தமையைத் தொடர்ந்து, நிலையியற் கட்டளை 23/2இன் கீழ், நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்ஸாவிடம் கேள்வியொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே, டக்ளஸ் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தை அண்டியுள்ள பறங்கியாற்றிலிருந்து பாலியாற்றுக்கு நீரினை தொடர்புபடுத்துவதன் ஊடாக மாங்குளம், வவுனிக்குளம், கொல்லவிளான்குளம், கல்விளான் குளம், மல்லாவிக் குளம் போன்ற பாரிய குளங்கள் பயனடையும். அத்துடன், இத்திட்டத்தின் மூலமாக மாங்குளம், மன்னாரின் ஒரு பகுதி, கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதி மக்களினது குடி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படுவதுடன், விவசாயம், கால்நடைகள் அபிவிருத்தி மற்றும் அதற்கேற்ற மேய்ச்சல் தரை உருவாக்கம் என்பன மேலும் ஊக்குவிக்கப்படுவதுடன், நிலத்தடி நீர் வளம் மேம்பாடடையும். எனவே இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர்,

ஆரம்பத்தில் இத் திட்டமானது மகாவலித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தது. அதற்கமைய இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் வரையிலான காடழிப்பு இடம்பெறுவதால் அது எமது சுற்றுச் சூழலுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்ற வகையில் இத் திட்டத்திற்கு மாற்றீடாக, பறங்கியாற்றிலிருந்து கால்வாய் அமைத்து பாலியாற்றுக்கு நீரைக் கொண்டு வருவதன் மூலம் வடக்கு மாகாணத்தில் ஒரு கணிசமான பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், சிறந்த அபிவிருத்தியை அடைய முடியும் என்ற வகையிலேயே, இது சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தாது என்ற வகையிலுமே இத்திட்டத்தை முன்வைக்கின்றேன் எனக் கூறினார்.

கடந்த காலங்களில் இத்திட்டம் முன்மொழியப்பட்டிருப்பினும், இதுவரை நடைமுறைப்படுத்தப்படாதது மிகவும் வேதனையளிக்கிறது. "ஒரு துளி நீரேனும் பயன்படுத்தப்படாமல், கடலை சென்றடைய விடக்கூடாது" என்ற பராக்கிரமபாகு மன்னனின் கூற்றுக்கு மாறாக, இந்த நீர்வளமானது பயன்பாடற்ற வகையில் மன்னார் கடலுக்குள் சென்று கொண்டிருக்கிறது. இவ்வாறு எமது மாவட்டங்களிலுள்ள நீர் வளங்கள் பயன்படுத்தப்படாமல் இன்றுவரை பெருமளவு நிலங்கள் தரிசு நிலங்களாகவே காணப்படுகின்றன. எனவே மேற்படி திட்டம் தொடர்பில் உரிய அவதானமெடுத்து அதனை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டுமென செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# இரண்டு ஆயிரத்து 534 குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படவில்லை

இறுதிப்போர் நடவடிக்கையின் போது முற்றாக இழப்பினை சந்தித்து வாழ்வாதாரத்திற்கு வழியில்லாது அல்லற்படும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் சமுர்த்தி நலக்கொடுப்பனவுக்காக விண்ணப்பித்த 25 ஆயிரத்து 379 குடும்பங்களில் இதுவரையில் 22 ஆயிரத்து 845 குடும்பங்களுக்கு மட்டும் சமுர்த்தி நலக்கொடுப்பனவுகள் கிடைப்பதாகவும் மிகுதியான 2 ஆயிரத்து 534 குடும்பங்களுக்கு சமுர்த்தி நலக் கொடுப்பனவு பெறதகுதியிருந்தும் இது வரை கிடைக்காமையால் தமது வாழ்வாதாரத்திற்கு தினமும் அல்லற்படுவதாக குற்றம் சாட்டுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வன்னி இறுதி யுத்தத்தின் போது அனைத்தையும் இழந்து இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் இருந்து மீள்குடியேறிய குடும்பங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து சமுர்த்தி நலக்கொடுப்பனவுக்காக விண்ணப்பித்த குடும்பங்களில் 12 ஆயிரத்து 266 குடும்பங்கள் தகுதி பெற்றிருந்தன. இக் குடும்பங்களில் 11 ஆயிரத்து 105 குடும்பங்களுக்கு மட்டும் சமுர்த்தி உதவி கிடைக்கின்றது. மிகுதி ஆயிரத்து 161 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவி கிடைக்கவில்லை.

இதேபோல் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சமுர்த்தி உதவிக் கொடுப்பனவுக்காக விண்ணப்பித்த குடும்பங்களில் 13 ஆயிரத்து 113 குடும்பங்கள் தகுதி பெற்ற நிலையில், 11 ஆயிரத்து 740 குடும்பங்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது.

மிகுதி ஆயிரத்து 373 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவிக்கொடுப்பனவு இது வரை கிடைக்கவில்லை. ஒட்டு மொத்தமாக இரு மாவட்டங்களுக்குமாக 2 ஆயிரத்து 534 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவிக்கொடுப்பனவு கிடைக்கவில்லையென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குற்றம் சாட்டுகின்றன.

எனவே துறை சார்ந்த அதிகாரிகள் இது தொடர்பில் விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும் என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (2-15)




# குடும்பஸ்தர் கரடிக்கடிக்கு இலக்கு

மன்னார் கொண்டாச்சி சிலாவத்துறையில் கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை இரவு 10.45 மணியளவில் நபரொருவர் கரடிக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

கபுல் ஹசீம் இல்லியாஸ் (வயது-55) எனும் 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கரடிக்கடிக்கு உள்ளாகியவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, இரவு வேளை வீட்டின் பின்புறம் சத்தம் கேட்டதும் குறித்த நபர் யானை என நினைத்து துரத்துவதற்கு சென்றுள்ளார்.

அவ்வேளை அங்கு நின்ற கரடி குடும்பஸ்தரைக் கடித்துள்ளது. இதில் அவரது ஒரு கண் பாதிப்படைந்து முகத்தில் மோசமான காயங்களுடன் காணப்பட்ட பிரஸ்தாப குடும்பஸ்தர் உடனடியாக அயலவரின் உதவியுடன் சிலாவத்தை, மன்னார் வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-3-30)



வடக்கிற்கு வருகை தந்திருந்த ஒஸ்ரியா மற்றும் நெதர்லாந்து நாட்டுப் பிரதிநிதிகள் ஏற்கனவே உறுதியளித்தமைக்கு அமைவாக மாகாணத்தில் சில வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்த போது.... (படங்கள்- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# மடு அன்னையின் வருடாந்த திருவிழா நாளைமறுதினம்



(மன்னார்)

மடு அன்னைக்கு வருடாந்த ஆவணித்திருவிழா மடுத்திருப்பதியில் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா திருப்பலி நாளை மறுதினம் திங்கட்கிழமை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதனையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.15 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம்பெற்று ஆசீர்வாதம் வழங்கப்படும்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு கொழும்பு அதி மேற்றாணியாரும் கர்தினாலுமான மெல்கம் ரஞ்சித், கண்டி மறைமாவட்ட ஆயர் ரியாணி பெர்ணான்டோ, அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் ரேமன் விக்கிரமசிங்க, மன்னார் அப்போஸ்தலிக்க பரிபாலகர் அதி வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோர் கூட்டாக இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள்.

அதன் பின்னர் மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெறும், ஆசீர்வாதம் நடைபெறும்.

இதுவரையிலும் இரண்டு இலட்சம் பக்தர்கள் மடுத்திருப்பதிக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 6 இலட்சம் பொது மக்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குடிநீர் வசதி, சுகாதார வசதிகள், உணவு, பொலிஸ் பாதுகாப்பு என அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (2)

# 15 இலட்சம் ரூபா பெறுமதியில் 180 பயனாளிகளுக்கு வலைகள்



( குருமன்காடு )

வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் 2016 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டிலிருந்து 45 மீனவர்களுக்கு வலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை மக்கள் தொடர்பகத்தின் முன்பாக நடைபெற்றது.

கடந்த ஆண்டின் தொடர்ச்சியாக இவ்வாண்டும் மேற்கொள்ளப்பட்ட இம்முன்னெடுப்பில் இதுவரைக்கும் 180 பயனாளிகளுக்கு 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியில் வலைகள் வழங்கப்பட்டுள்ளதாக ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மீனவர் வாழ்வை வலுவூட்டும் நோக்கத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களுக்கு தலா இரண்டு வலைகள் வீதம் வழங்கப்படும் முன்னெடுப்பு ஒன்றை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கடந்தாண்டு முதல் தொடக்கி வைத்தார்.

இவ்வாண்டும் சென்ற முறையில் உள்வாங்கப்பட்ட மீனவர்கள் தவிர்ந்த 45 மீனவர்கள் இச்செயற்றிட்டத்தில் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கு தலா இரண்டு வலைகள் வீதம் 4 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியில் வலைகள் வழங்கப்பட்டுள்ளன. (2-250)

# வடக்கு மாகாண சுகாதார அபிவிருத்திக்கு ஒஸ்ரியா, நெதர்லாந்து நாடுகள் உதவி

வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் கோரிக்கைக்கிணங்க கடந்த 16.05.2016 அன்று தொடக்கம் வடக்குக்கு விஜயம் செய்த ஒஸ்ரியா மற்றும் நெதர்லாந்து நாட்டு பிரதிநிதிகள் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளை பார்வையிட்டு விரைவில் அவற்றின் அபிவிருத்திக்கு உதவுவதாக உறுதியளித்து சென்றிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக கடந்த 3 ஆம் திகதி மீண்டும் வடக்கிற்கு வருகை தந்திருந்த குறித்த ஒஸ்ரியா மற்றும் நெதர்லாந்து நாட்டு பிரதிநிதிகள் ஏற்கனவே உறுதியளித்ததற்கமைவாக மாகாணத்தில் சில வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்து அவற்றின் அபிவிருத்தி தொடர்பில் அவர்களால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்களில் ஈடுபட்டதுடன் குறித்த திட்டங்களுக்கான அமைவிடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்..

இதன்போது வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோர் இணைந்திருந்தனர். (2-281)

# பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

( கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடை பெறும். (2-277)







கிளிநொச்சி, பூநகரிக்கு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க சபையின் தலைவருமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.
இதன்போது பூநகரி மக்களுக்கான மழைநீர் சேமிப்பு திட்டத்தை கிளிநொச்சி ஞானிமடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (படங்கள்-மல்லாவி, பரந்தன், செய்தியாளர்கள்)

# உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(மல்லாவி)

யுத்த காலத்தில் விடுதலைப்புலிகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இராணுவம் மற்றும் பொலிஸாரிடத்தில் சென்று காணாமற்போனவர்கள் என பல்வேறு தரப்பினர் தமது உறவினர்களைத் தேடி வருகின்றனர். காணாமல்ஆக்கப்பட்டமைதொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க சபையின் தலைவருமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விசேட வானூர்தி மூலம் வந்திறங்கிய முன்னாள் ஜனாதிபதி மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கிளிநொச்சி, பூநகரி மக்களுக்கான மழைநீர் சேமிப்பு திட்டத்தை கிளிநொச்சி ஞானி மடத்தில் முன்னாள் ஜனாதிபதி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மழைநீர் சேமிப்பு திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பூநகரி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன், மாகாண சபை உறுப்பினர்கள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி குறிப்பிடுகையில்,

தற்போதுள்ள அரசாங்கத்தின் மூலம் இரண்டு பிரதான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களுக்கான அபிவிருத்தி மற்றும் காணாமற்போனோரை கண்டறிதல் ஆகிய இரண்டுமே இதுவாகும். காணாமற்போனோர் தொடர்பில் கண்டறியும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை தொடர்பிலும் அவர் தெரிவித்தார்.

யுத்த காலத்தில் விடுதலைப்புலிகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இராணுவம் மற்றும் பொலிஸாரிடத்தில் சென்று காணாமற் போனதாக பல்வேறு தரப்பினர் தமது உறவினர்களை தேடி வருகின்றனர். இவர்களின் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என அவர் தெரிவித்தார்.

நல்லிணக்கத்திற்கான அமைப்பின் பிரதான வேலையாக பல தற்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக இன்றைய தினம் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டமான மழை நீர் சேமிப்பு திட்டத்தினையும் குறிப்பிடலாம். பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்பும் செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ் ,சிங்கள ,முஸ்லிம் ஆகிய இனங்களுக்கு இடையில் இவ்வாறான நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவதற்கான பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

# பயன்பாட்டிற்கு வழங்கப்படாத நிலையில் முழங்காவில் பொதுச்சந்தை கட்டடத்தொகுதி

## வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

(பரந்தன்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முழங்காவில் பொதுச்சந்தைக் கட்டடத்தொகுதி ஒன்று கடந்த மூன்று வருடகாலமாக பல இலட்சம் ரூபாய் பெறுமதியில் பூநகரி பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டு பாவனைக்கு கையளிக்கப்படாததால் வணிகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக குற்றம் சாட்டுகின்றனர்

இது தொடர்பாக வணிகர்கள் கருத்துத் தெரிவிக்கையில், மக்கள் செறிவாக வாழ்கின்ற முழங்காவில் பிர தேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுச்சந்தை கட்டடத் தொகுதியான்து பாதுகாப்பற்ற கதவுகளைக் கொண்டு அமைக் கப்பட்டுள்ளதுடன் வணிகர் களாகிய எமது பாவனைக்கு இதுவரையும் விடப்படாத நிலையில் இருப்பது பொறுப்பற்ற தன்மையையே காட்டுகின்றது என வணிகர்களால் கட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன் வணிகத்தினை மேற்கொள்வதற்கு பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் வெற்றிலைக்கடை ஓரிடத்திலும் பழக்கடை ஓரிடத்திலும் மற்றும் பலசரக்குக் கடை வேறோரிடத்திலும் இருப்பதனால் தமது வியாபாரங்கள் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கும் அவர்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியினை பாதுகாப்பான முறையில் மாற்றி வர்த்தகர்கள் அனைவரும் ஓரிடத்தில் வணிகம் செய்வதற்கு இக் கட்டடத் தொகுதியை வெகுவிரைவில் திறந்து தமக்கு கையளிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (2-312)




# 16 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிப்பு; அரிசிப் பொதிகளை அழிக்குமாறு உத்தரவு

(மல்லாவி)

கிளிநொச்சிப் பகுதியில் காலாவதியான இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை பொதிகளாக மாற்றிய இரண்டு வர்த்தகர் களுக்கு 16 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் அரிசினையும் அழிக்குமாறு கிளிநொச்சி மாவட்டநீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டு ள்ளது..

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காலாவதியான அரிசியை மாற்ற பொதிசெய்த அரிசியாலை உரிமையாளர் மற்றும் வர்த்தகர் ஒருவரிடமிருந்தும் காலாவதியான 25 கிலோ எடை கொண்ட 152 பைகளை பாவனையாளர் அதிகார சபையினர் மீட்டு அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முதலாவது குற்றவாளிக்கு பத்தாயிரம் ரூபாவும் இரண்டாவது குற்றவாளிக்கு ஆறாயிரம் ரூபாவும் என மொத்தம் பதினாறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் அரிசிப் பொதிகளை அழிக்குமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (2-15)

# வடக்கிற்கு அதிகளவான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

(மல்லாவி)

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் சுமார் 80 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். பலர் உடல் அவயவங்களை இழந்து விசேட தேவையுடையோராக ஆக்கப்பட்டுள்ளனர் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, பூநகரி மக்களுக்கான மழைநீர் சேமிப்புத் திட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி ஞானிமடத்தில் முன்னாள் ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் 80 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர்.

முன்னைய காலத்தில் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கண்டதன் பின்னரே விதவைகளானசம்பவங்கள்உண்டு. ஆனால் இன்று இளம்பெண்கள் விதவைகளாக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

உடல்அவயவங்களை இழந்து விசேட தேவையுடையோராக பலர் ஆக்கப்பட்டுள்ளனர் மட்டுமன்றி பலர் காணாமற் போயும் உள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வடக்கிற்கான பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். குறிப்பாக நேற்றும் (நேற்று முன் தினம்), இன்று (நேற்று) பல் வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி ,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பல அபிவிருத்திதிட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியை கேட்டுக்கொள்கின்றேன்.

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவரை கேட்டுக்கொண்டார்.

கூட்டு அரசாங்கத்தின் ஆட்சியில் பல்வேறு நெருக்கடிகளை வடக்கு மாகாணம் எதிர்கொண்டது.

ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் மக்கள் பல்வேறு திட்டங்களை அனுபவிக்கின்றனர்.

வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு இரண்டு வருடங்கள் எவ்விதமான அதிகாரங்களும்வழங்கப்படாத நிலையில் இருந்தது. ஆனால் புதிய அரசாங்கம் மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்கியிருந்தது.

வடக்கில் பல பாடசாலைகள் இன்றும் அடிப்படை வசதிகள் இல்லாமல்உள்ளன. தரையில் இருந்து கல்வி பயில வேண்டிய நிலையை நான் நேரில் சென்று அவதானித்தேன்.

தளபாடங்கள் வழங்கப்படவில்லை. இந்நிலையில் வடக்கிற்காக அதிகளவான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—83

# மண்புழு திரவமும் மண்புழு உர தேநீரும் சிறந்த தாவர ஊக்கிகள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மண்புழு மனிதனுக்கு நல்ல நண்பன். இன்னும் மிகைப்படுத்தினால் விவசாயிக்கு உற்ற நண்பன். மண்ணை வளப் படுத்திக் கொடுக்கும் நல்லதொரு உயிரினம். இதற்கு கண்ணும் இல்லை. காதும் இல்லை. நடக்க நல்ல கால்களும் இல்லை. எங்க ளோடு ஒப்பிட்டால் ஒருவகை யில் ஊனமுற்ற உயிரினம். ஆனாலும் உதவி செய்யும் நல்ல உயிரினம்.

விஞ்ஞானம் கற்கும் மாணவனுக்கு விளை யாட்டுக்காக, படிக்க மண்புழு நல்லதொரு நண்பன். எமது மண்ணிலே வாழ்ந்து அந்த மண்ணுக்கே உரித்தான சிறப்புக்குரிய உயிரினம் இது. ஊர்ந்து செல்லும் உயிரினமாகிலும் உற்பத்திக்கு உதவிடும் உருப்படியான உயிரினம். ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புக்களை (Hermaphrodite) ஒன்றாக ஒரே மண்புழுவில் காணும் சிறப்புக்குரியது. சேதனக் கழிவுகளை உணவாக உண்டு தனது உணவுக் கால்வாயிலுள்ள சுரப்பு களுடன் கலந்து 5-6 உணவை அகத்துறிஞ்சி விட்டு மீதியை தனது கழிவாக, உணவுக் கால் வாயிலுள்ள நுண்ணங்கி களுடன் கலந்து வெளி யேற்றுகின்றது. மண் புழுவிற்கு கழிவு. எமக்கது மண்புழு உரம். சேதனக் கழிவை உண்டு தனது கழிவாக வெளிவிடும் மண்புழு கழிவு பயிர்களுக்கு நல்ல உரம். இயற்கை தந்ததொரு நல்ல உயிரியல் தொழில்நுட்பம்.

மண்ணில் வாழும் உயி ரினமாகையினால் மண் புழுவிற்கு வேறுபடும் சூழல் வெப்பநிலைகளை

அது மண்புழு சுரப்பு(Vermi Wash) எனப்படும். இச்சுரப்பில் தாவர வளர் ச்சியை ஊக்குவிக்கின்ற ஓமோன்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மொத்தத்தில் மண்புழு சுரப்பு தாவரங்களுக்கு நல்லதொரு டொனிக். இதுபற்றிய ஆய் வினை இவ்வருட இறுதியாண்டு விவசாய உயிரியல்துறை சிறப்பு மாணவனான ச.மயூரன் மேற்கொண்டு பெற்ற முடிவுகளை, யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இவ்வருடாந்த மாநாட்டில் ஆய்வுக் கட்டுரையாக வெளிப் படுத்தியிருந்தார். அவற்றை

இட்டபின் மண்புழுக்களை வெளியே எடுத்துவிட வேண்டும். நாம் கவனித்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், மண்புழுக்கள் எக்காரணம் கொண்டும் இறந்துவிடக் கூடாது. மண்புழுக்கள் இறக்க இளஞ் சூடு காரணமாகக் கூடாது.

இவ்வாறு பெறப்படும் மண்புழு சுரப்பை அப்படியே அல்லது நீர்விட்டு கலந்தோ பயிர்களுக்குத் தெளிப் பானினால் விசிறிடலாம். என்ன அளவு என நீங்கள் கேட்பது புரிகிறது. இதற்கென அளவு இது என இதுவரையிலும் எந்தவித வரையறையும் இல்லை.

சேகரித்துப் பயிர்களுக்கு விசிறிடலாம். இங்கே இச்சுரப்பில் விசேடமாக மண்புழு திரவத்துடன் சேர்ந்து அதனது கழிவிலிருந்து எமக்கது மண்புழு உரத்திலி ருந்து பெறப்படும் அனைத்து நுண்ணூட்டச் சத்துக்களும் ஒன்று சேர்வதனால் மிகவும் சிறப்புக்குரியதாகின்றது.

**வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களுக்கு விசிறலாம்**

வீட்டுத்தோட்டம் ஒவ்வொரு வீடுகளுக்கும் தேவைக்குரிய தாகும். பாடசாலைகளிலோ, அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் என்றவேறு பாடில்லாத அளவிற்கு வீட்டுத் தோட்டத்தின் அவசியம்

எங்களூர் விவசாயப் பெருமக்களுக்கும் விவசாயிக்கும் இது இனிப்பான செய்தி. பீடைநாசினிகளாலும் அசேதனப் பசளைகளினா லும் மாசுபட்டுப் போயிருக் கும் எமது தேசத்தை நஞ்சற்ற வளங்கொழிக்கும் பிரதேசமாக மாற்றுவோம். இரும்புக் கடைகளிலே கிடைக்கக்கூடிய சிறிய கைத்தெளிப்பான் மண்புழு சுரப்பை விசிறுவதற்கான சிறந்த உபகரணம்.

**வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு விசிறுவதற்கு மண்புழு சுரப்பு மிகவும் சிறந்தது. வீட்டிலே தயாரித்து அங்கேயே விசிறலாம்.**

வளமான விவசாயத் திற்கு அன்றும் இன்றும் என்றும் இயற்கை தந்த இனிய வரம்தான் மண்புழு சுரப்பும் மண்புழு உரமும். சேதன விவசாயத்தைத் துணிந்து முன்னெடுப்பதற்கு இவ்வாறான இலகுவான எளிமையான தொழில்நுட் பம் என்றென்றும் கைகொ டுக்கும். பொழுது போக்காக செலவிடும் நேரத்தை மண்புழு உரம் தயாரிப்



எமது மக்களுக்கு தெரியப் படுத்தும் வண்ணமாக் இக்கட்டுரை சிறப்புடையதாகின்றது.

**மண்புழு சுரப்புப் பெறுவது எப்படி?**

மண்புழு சுரப்பை பெறுவது சுலபம். இரண்டு முறைகளில் இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

**முறை - 1**

மண்புழுக்களைச் சேகரி த்து இளஞ்சூடு உடைய நீரில் இட வேண்டும. மெல்லிய

சுரப்பின் அளவைக் கூட்ட வேண்டுமாயின் அதிக எண்ணிக்கையான மண்பு ழுக்களை ஒரேயளவு நீரில் போடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**முறை - 2**

இந்த முறையில் பெறப்படும் மண்புழு சுரப்பு விசேடமானது. மண்புழு உரம் தயாரிக்கும் கொள்கலனின் அடிப்பக்கத்தில் நீர் வடிந்து வெளியேறுவதற்கான

உணரப்பட்ட நிலையில் வீட்டுத்தோட்டத்தினை அவரவர் வசதிக்கேற்ப உரு வாக்கிக் கொள்ளலாம். அதி லுள்ள பயிர்களுக்கு விசிறு வதற்கு அவரவர் வீட்டிலேயே மண்புழு சுரப்பினைத் தயாரித்து உடன் விசிறலாம். இவ்வாறு விசிறுவதனால் பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்டச்சத்தினை நீங்களே மண்புழு நண்பனுடன் இணைந்து தயாரிக்க முடியும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 100

தாக்குப்பிடிக்க முடியாது. இதனைச் சமாளிக்க தனது உடற் சுரப்பினை உடற்பரப்பிலுள்ள இதற்கென அமைந்துள்ள துளைக ளினூடாக அவ்வப்போது வெளியே விட்டு உடல் வெப்பநிலையைப் பேணிக் கொள்ளும் இயல்பு இதற்கே உரித்தான சிறப்பியல்பு. இவ்வாறு வெளிச்சுரக்கும் சுரப்பினை எமதாக்கினால்

இளஞ்சூடு என்பதனை எப்படித் தீர்மானிக்கலாம். மெல்லிய சூடு கொண்ட கொள்கலத்தை எமது காதுச் சோணைகளில் படுமாறு பிடிக்கும் போது காதுச் சோணைகளால் தாங்கக் கூடியவாறு இருக்கின்ற இளஞ்சூட்டுப் பருவத்தை (அண்ணளவாக 36 - 42$^{O}$C) குறிப்பிடுகின் றேன். 3 -5 நிமிடங்கள் இவ்வாறு இளஞ்சூட்டு நீரில்

துளையொன்றை ஏற்படுத்தி விட்டு மண்புழு கொள்கலனில் மேற்பக்கத்தில் நீரை தெளிக்கும்போது அந்நீர் மண்புழுவில் பட்டு அதன் கழிவுகளிலுள்ள நுண்ணூ ட்டச் சத்துக்களை கரைத்துக் கொண்டு கொள்கலனிலுள்ள அடிப்பக்கத்திலேற்படுத்திய துளையினூடாக வடிந்து வெளியேறும். இந்த வெளியேறும் திரவத்தைச்

இவ்வாறான இலகு தொழில் நுட்பம் மூலமாகப் பயிர்ச் செய்கை செலவினைக் குறைப்பதுடன் சேதன விவசாயத்தின் கைகளை மேலும் பலப்படுத்த முடியும். சேதன விவசாயத்தை யாழ்ப்பாணத்தில் முழுமை யாகச் செய்ய முடியாது என அடித்துக் கூறும் விதண்டா வாதிகளுக்கு இது ஒரு கசப்பான செய்தி. ஆனால்,

பதிலும் மண்புழு சுரப்பை உற்பத்தி செய்வதிலும் செலவிடலாமே. நேரமும் பிரயோசனமாகக் கழியும். தேவையான மண்புழு சுரப்பும் உரமும் கிடைக் கும். சிறுகச் செய்தால் வீட்டுத் தோட்டம். பெருகச் செய்தால் பசுமைப்புரட்சி. எமது நாட்டின் அபிவிருத்தியின் அத்திபாரம்.

# செய்தித்துளிகள்

## தெய்வீக இசைச் சொற்பொழிவு

மட்டக்களப்பு கித்துள் ஸ்ரீ முருகன் தேவஸ்தான அலங்கார உற்சவத்தின் 5 ஆம் நாளான இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு தெய்வத் தமிழ்ச்சுடர் இராசையா ஸ்ரீதரனின் கந்தன் கருணை எனும் பொருளில் தெய்வீக இசைச் சொற் பொழிவு இடம்பெறும். (இ

## நூலும் சஞ்சிகையும் பெறப்படும்

இலங்கை எழுத்தாளர்களிடமிருந்து இரண்டு நூல்களையும் சஞ்சிகையாளர்களிடமிருந்து ஒரு சஞ்சிகையும் பெற்றுக்கொள்ள கொழும்புத் தமிழ்ச்சங்கம் தீர்மானித்துள்ளது என அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார். (இ

## சட்டவிரோத ஆயுதங்கள் மீட்பு

ஹங்குராங்கெத்த-தமுனுமேய பிரதேசத்தில் சட்டவிரோத ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம்மாலை பிரதேசவாசிகளின் தகவலுக்கமைய இந்த ஆயுதங்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதில் டி.56 ரக துப்பாக்கி குண்டுகள் 261, துப்பாக்கி பாகங்கள் 3, மெகசின் 4, உள்ளிட்டவையும் ரம்போ வர்க்க கத்திகளையும் ஹங்குராங்கெத்த பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆயுதங்கள் ஆயுத களஞ்சியசாலை ஒன்றில் இருந்து திருடப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவித்துள்ள பொலிஸார் இது தொடர்பான விசேட விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

## அகழ்வுப்பணிகள் காரணமாக நிலம் தாழிறங்கும் அபாயம்

இலங்கை மின்சார சபையினால் கினிகத்தேன - பொல்பிடிய பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புரோட்லேண்ட் நீர்மின் நிலைய திட்ட அகழ்வுகள நடைபெறும் சுரங்கப்பாதைக்கு மேலாக அமைந்துள்ள வீடொன்று அண்மையில் தாழிறங்கியது. அதனைத் தொடர்ந்து சம்பவம் குறித்து நேரில் ஆராய நேற்று முன்தினம் மின்சக்தி மற்றும் மீள்புதுப்பித்தல் சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய அந்தப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னரே இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருந்ததாக இதன்போது அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ-7-10)

## கட்டடத்தில் ஏறி எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் கைதாகினர்

திவிநெகும திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடத்தின் கூரையில் ஏறி எதிர்ப்பில் ஈடுபட்ட 5 நபர்களை அரநாயக்க பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர். மண்சரிவின் காரணமாக ஆபத்தான பகுதி என அறிவிக்கப்பட்ட இடங்களில் மக்களை மீண்டும் குடியேற்ற எடுக்கப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து பிரதேசவாசிகள் அண்மையில் அரநாயக்க பிரதேச செயலகத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ள திவிநெகும அபிவிருத்தி வங்கி கட்டடத்தின் கூரையில் ஏறி எதிர்ப்பில் ஈடுபட்டவர்களே நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7-10)

## ஆயிரம் கடைகளை அகற்ற திட்டம்

கொழும்பில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் அகற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாக அப்புறப்படுத்துமாறு உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா பொலிஸார் மற்றும் நகரசபை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

## தெய்வீக இசைச் சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8 மணி வரை நடத்திவரும் தெய்வீக இசைச் சங்கமத்தில் இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை பிரம்மஸ்ரீ நா. சிவசுந்தரசர்மா குழுவினர் வழங்கும் லயப்ரம்மம் இடம்பெறும்.

இதில் குரலிசை -அமிர்தசிந்துஜன், கடம்-நா.மாதவன், முகர்சிங்-செந்தூரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் "அருள் நெறி விழா" இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் எம்.நந்தகோபாலன் கலந்து கொள்வார். இதில் செ.பாலச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை "கெடுவாய் மனமே" எனும் தலைப்பில் சைவப்புலவர் நா.நவராஜ் இன் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும். (இ-7)

## தெய்வீக சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத் திருச்சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் "தெய்வீகச் சொற்பொழிவு" இன்றும் இடம்பெறும்.


மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் கவிமாமணி அன்னைதாசன் "நல்லையின் பெருமை" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி. காண்டீபன் கலந்து கொள்வார். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை பாட்டு-திருமதி. குமுதா உமாகாந்தன், வயலின் -ப.சியாம் கிருஷ்ணா, மிருதங்கம்- ந.நந்தகுமார் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

# நல்லூரானுக்கு இன்று 6ஆம் திருவிழா




## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

உள்ளத்தி லுன்னையே யள்ளியே யுள்ளவற்
கோங்கார மாகுமொளியே
கள்ளத்தி லுள்ளத்தைப் பள்ளத்தில் தள்ளிடும்
கள்வர்கள் கயவர்தமையே
எள்ளிநகை யாடியவற் கேற்றபடி தீர்ப்பினை
எழுதிடு மின்பவேலே
நள்ளிரவு பகலென்று நாள்தோறும் நமைக்காக்கும்
நல்லூரின் கந்தவேளே!

*கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்*

## உன் நலம் காண ஆசை



அன்புள்ள நல்லூர்க்கந்தா – உனக்கு
ஆவணியிலே மஹோற்சவம்
ஆனந்தக் காவடிகள் வீதியெல்லாம்
பக்தர்கள் கூட்டம் பரவி வர
பால் அபிஷேகமாம் – நலம் காண
ஆசையாக உள்ளேன் – உன்
பதிலை என் முகவரிக்கு அனுப்பி வை

*–த.தனயரசி, பருத்தித்துறை.*

## நல்லருள் புரிபவனே நல்லைக்கந்தனே

வல்லருள் தருபவனே வடிவேலனே
நல்லருள் புரிபவனே நல்லைக்கந்தனே
மயில் மீது வருபவனே மயில் வாகனனே
வேல்கொண்டு வினை தீர்த்த வேலோனே

*–ஜெ.தவேதன், யாழ்.இந்துக்கல்லூரி.*

## நலம்தரும் நல்லூரான்

வில்லேந்திய வீர சூரனுடன் –வந்த
பல்லாயிரம் அவுணரைப் புறமிட்டு
நில்லாது ஓடவிட்ட –எம்
நல்லூரின் நாயகனே நலம்பல தந்திடுவாய்

*-க.துவாரகன்,*
*யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.*

## சரவணபவ குக சண்முகனே!



தந்தைக்கு உபதேசம் செய்து
தகப்பன் சாமி ஆனாய்!
உன்னை வந்தனை செய்பவர்களுக்கு
வரம் என்றும் அருளுவாய்!
உன்னை நினைப்பவர்கட்கு
உயர்வு கொடுத்திடுவாய்!
கிள்ளித் தினை மாவைத் தின்று –வள்ளியை
வரித்துக்கொண்டாய்!
எள்ளி நகை காட்டி தெய்வானையை கைபிடித்தாய்
வெள்ளி வேலினைக்கொண்டு
வினைதனை போக்கிடுவாய்
துள்ளித்திரிகின்ற எங்கள் பிள்ளைகளின்
துடுக்கினை அடக்கி வைப்பாய்

*-வாணி, விஸ்வமடு.*

## சீரான வாழ்வுநெறி புரளாமல் காத்திடுவாய்

ஆரவாரமின்றி அமைதியாய் அமர்ந்து உன்
தேவாரப் பதிகங்கள் தெளிவாக ஓதிடுவேன்
தீராத நோய் நொடிகள் தொடுகின்ற போதெல்லாம்
கூரான வேலினை கண்முன் கொணர்ந்திடுவேன்
ஏராளம் தொண்டருடன் ஏதிலியாய் வருகின்றேன்
வேறாக விட்டிடாமல் வெற்றிகளை அளித்திடுவாய்
சீரான வாழ்வுநெறி புரளாமல் காத்திடுவாய்
பாராளும் கந்தா நல்லைப் பதியானே

*–மானந்தன், அல்வாய்.*

# மடுமாதா உற்சவத்திற்கான விசேட பேருந்துச் சேவை

மன்னார் மடு மாதா ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு எதிர்வரும் 14,15,16 ஆகிய மூன்று தினங்களும் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து பயணிகளின வருகைக்கு ஏற்ப விசேட பேருந்து சேவை இடம்பெறவுள்ளது. எனவே மன்னார் மடு ஆலயம் செல்லும் அடியார்கள் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் ஆசன முற்பதிவினைச் செய்து தமது பயணத்தினை மேற்கொள்ளலாம் என இ.போ.ச. யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ

# சீனாவில் மின்நிலையத்தில் பயங்கர வெடி விபத்து

## 21 பேர் பலி; 5 பேர் படுகாயம்



(பீஜிங்)

**சீனாவில் உள்ள டான்யாங் மின் நிலையத்தில் நேற்று திடீரென ஏற்பட்ட வெடி விபத்தில் 21 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளதுடன் பலர் காயமடைந்தனர்.**

அதில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவ இடத்திற்கு மீட்பு குழுவினர் விரைந்து தீயை அணைத்து வருகின்றனர்.

மின் நிலையத்தில் திடீரென ஏற்பட்ட வெடி விபத்தில் அங்கு பரபரப்பு நிலவி வருவதாக சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

# ஓடும் விமானத்தில் ஏற முயன்ற பயணியால் பரபரப்பு




(மாட்ரிட்)

ஸ்பெயின் விமான நிலையத்தில் ஓடும் விமானத்தை பிடிப்பதற்காக விமான ஓடு பாதையில் ஓடிய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாட்ரிட் நகரில் இருந்து கிரான் கெனேரியா நகருக்கு செல்வதற்காக ரெயான் நிறுவன விமானத்தில் பயணச் சீட்டு வாங்கி இருந்த அந்த இளைஞன் பாதுகாப்பு அனுமதி மற்றும் விமானத்தில் ஏறுவதற்கான அனுமதியை பெற்றபோதும் அவர் விமானத்தை அடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் விமான ஓடுபாதையில் தனது இரு பயணப் பொதிகளையும் ஏந்தியவாறு ஓடிய இளைஞனை அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் மடக்கி பிடித்துள்ளனர்.

பாதுகாப்பு விதிகளை மீறிய அந்த இளைஞன் 45,000 யூரோக்கள் வரை அபராதத்தை சந்திக்கும் நிலைக்கு முகம்கொடுத்துள்ளார்.

தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக ஸ்பெயின் விமான நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையிலேயே பயணி ஒருவர் இவ்வாறு அத்துமீறி நுழைந்திருப்பது அங்கு விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# அடுத்தடுத்த குண்டு வெடிப்புக்களால் அதிர்ந்தது தாய்லாந்து



(பாங்கொக்)

தாய்லாந்தில் 24 மணி நேரத்தில் தொடர்ச்சியாக நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 4 பேர் பலியாகியுள்ளதுடன் 19 பேர் காயமடைந்தனர்.

தாய்லாந்து நாட்டின் ஹுவா ஹின் மாவட்டத்தில் கடற்கரையையொட்டி சொகுசு விடுதிகள் அமைந்துள்ள பகுதியில் நேற்று முன்தினம் இரவு அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்தன.

இரவு 10 மற்றும் 10.30 மணியளவில் நிகழ்ந்த இந்த குண்டுவெடிப்பு சம்பவங்களில் ஒரு பெண் பலியானார். வெளிநாட்டவர்கள் உட்பட பத்துக்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான அதிர்ச்சி விலகும் முன்னர் நேற்றுக் காலை மீண்டும் அதே பகுதியில் மேலும் இரு குண்டுகள் வெடித்தன.

இதுமட்டுமன்றி தொடர்ந்து கடற்கரையோர சுற்றுலாத் தலமான புக்கெட், தீவு நகரமான சுரத்தானி மற்றும் தெற்கு டிராங் ஆகிய பகுதியில் நேற்றுக் காலை அடுத்தடுத்து குண்டுகள் வெடித்ததாக தெரியவந்துள்ளது.

மேற்கண்ட 8 குண்டு வெடிப்பு சம்பவங்களிலும் 4 பேர் பலியானதாகவும் 19 பேர் காயமடைந்ததாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. காயங்களுடன் வைத்திசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (இ-5)

# ரஷ்யத் தாக்குதலால் சிரியாவில் 30பேர் பலி

சிரியாவின் ரக்கா மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் ரஷ்ய ராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியதில், மக்கள், தீவிரவாதிகள் என 30 பேர் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கூறும்போது, "ரஷ்ய விமானப்படை விமானங்கள் சுமார் 10 முறை தாக்குதல் நடத்தின.

உயிரிழந்தவர்களில் எத்தனை பேர் ஐஎஸ் தீவிரவாதிகள் என தெரிவிக்கப்படவில்லை. மொத்தம் 6 டபோலெவ் போர் விமானங்களைப் பயன்படுத்தி ரக்கா மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் தாக்குதல் நடத்தி, இரசாயன ஆயுத தொழிற்சாலையை அழித்ததாக ரஷ்யா உறுதி செய்துள்து.

சிரியாவின் வடக்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் உள்ள ஐஎஸ் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களையும் தாக்கி அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ-5)

# துருக்கியில் இராணுவ சதிப்புரட்சி; அமெரிக்காவில் அதிகாரி தஞ்சம்

அமெரிக்காவில் நேட்டோ பணியில் இருந்த துருக்கி ரியர் அட்மிரல் ஒருவர் துருக்கி இராணுவ சதிப் புரட்சி முயற்சி தொடர்பில் தேடி வரும் நிலையில் அமெரிக்காவில் தஞ்சம் கோரியுள்ளார்.

துருக்கி மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருக்கும் நிலையிலேயே ரியர் அட்மிரல் முஸ்தபா சக்கி உகுர்லு அமெரிக்காவில் அடைக்கலம் பெற்றுள்ளார்.

வெர்ஜினியாவில் இருக்கும் நேட்டோ கூட்டுப்படை கட்டளைத் தளத்தில் நிலை கொண்டிருந்த உகுர்லுவை கைது செய்ய துருக்கியில் உத்தரவிடப்பட்டுள்ளது. எனினும் உகுர்லு தனது இராணுவ தளத்திற்கு கடந்த மாதம் ஜூலை 22 ஆம் திகதி தொடக்கம் திரும்பவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் உகுர்லுவின் தஞ்சக்கோரிக்கையை அமெரிக்கா ஏற்றதா? இல்லையா? என்ற விபரம் உறுதி செய்யப்படவில்லை.

இந் நிலையில் துருக்கியின் ஆட்சி கவிழ்ப்பு முயற்சியின் பின்னணியில் இருந்ததாக குற்றம் சுமத்தப்படும் மதகுரு பதுல்லாஹ் குலனை நாடு கடத்தும் படி துருக்கி அரசு அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்த விவகாரம் இரு நாட்டு உறவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று துருக்கி எச்சரித்து வருகிறது. (இ-5)

# இந்தியாவில் கோடீஸ்வர முதல்வர்களில் சந்திரபாபு நாயுடு முதலிடம் சொத்து மதிப்பு ரூ.134 கோடி



இந்தியாவில் கோடீஸ்வர முதல்வர்கள் பட்டியலில் ஆந்திர முதலமைச்சர் சந்திர பாபு நாயுடு முதல் இடத்தில் உள்ளார். அவரது சொத்து மதிப்பு ரூ.134 கோடியே 80 இலட்சத்து 11 ஆயிரத்து 728 ஆகும்.

இந்தியாவை சேர்ந்த கோடீஸ்வர முதலமைச்சர் பற்றிய பட்டியலை அசோசியேஷன் ஆப் டெமாகிரட்டிக் ரீ பார்ம் நிறுவனமும், தேசிய தேர்தல்கண்காணிப்பு அமைப்பும் இணைந்து வெளியிட்டுள்ளது.


இதில் இந்திய கோடீஸ்வர முதல்வர்கள் பட்டியலில் ஆந்திர முதலமைச்சர் சந்திர பாபு நாயுடு முதல் இடத்திலுள்ளார். அவரது சொத்து மதிப்பு ரூ.134 கோடியே 80 இலட்சத்து 11 ஆயிரத்து 728 ஆகும். 2 ஆவது இடத்தை அருணாசல பிரதேச முதலமைச்சர் பெமா கண்டு பிடித்துள்ளார். இவரது சொத்து மதிப்பு ரூ.129 கோடியே 57 இலட்சத்து 56 ஆயிரத்து 14 ஆகும்.

ஆந்திர அமைச்சரவையில் 20 பேர் அமைச்சர்களாகவுள்ளனர். இவர்களில் 18 பேர் கோடீஸ்வரர்கள் ஆவர். இவர்களில் முதல் இடத்தில் அமைச்சர் நாராயணா உள்ளார்.

இந்த சொத்து மதிப்பை அவர்கள் தேர்தல் ஆணையகத்திடம் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஐ.எஸ். பயங்கரவாதம் உருவாக ஜனாதிபதி ஒபாமாவே காரணம்

## டிரம்ப் கடும் விமர்சனம்



குடியரசுக் கட்சி சார்பில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ள டொனால்ட் டிரம்ப் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் ஒப்பிட்டு கடுமையாக சாடியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புளோரிடாவில் உள்ள போர்ட் லவ்டர்டேலில் நடந்த பிரசாரத்தில் டொனால்ட் டிரம்ப் பேசிய போது, "தற்போது மத்திய கிழக்கு நாடுகள் முதல் ஐரோப்பிய நாடுகள் வரை ஐ.எஸ் பயங்கரவாதம் வளர்ந்திருப்பதற்கு காரணமாக இருப்பவர் ஜனாதிபதி ஒபாமாதான் என வெளிப்படையாகவே விமர்சித்துள்ளார். "பராக் ஹுசைன் ஒபாமா" என அவரது முழுப் பெயரையும் 3 முறை அழுத்தமாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்.

இதுவரை ஹிலாரி கிளிண்டனை ஐ.எஸ். பயங்கரவாதத்துடன் ஒப்பிட்டு விமர்சித்து வந்த நிலையில் தற்போது ஒபாமாவை விமர்சிக்க தொடங்கியுள்ளார் டிரம்ப்.

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படையை திரும்பப் பெறுவோம் என ஒபாமா கூறியிருப்பது ஐ.எஸ். பயங் கர வாதத்திற்கு ஆதரவளிப் பது போன்றது எனவும் டிரம்ப் கடுமையாக விமர்சித் துள்ளார்.

எனினும், இந்த விமர்சனம் குறித்து வெள்ளை மாளிகை எவ்வித பதிலையும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜப்பானிய அரசின் "குளோபல் 30" கல்வித்திட்டம்

## ஆங்கிலமொழிமூல புலமைப்பரிசில்களுக்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது

தமது உயர்தராதர கல்வியைப் பூர்த்தி செய்திருக்கும் இலங்கை மாணவர்களுக்கு ஏறக்குறைய 200 புலமைப்பரிசில் வாய்ப்புக்களை ஜப்பானிய அரசாங்கம் அதனது 'குளோபல் 30' திட்டம் மூலம் வழங்குகிறது.

சர்வதேச் நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 3 இலட்சம் மாணவர்களுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் தெரிந்து கொள்ளப்பட்ட ஜப்பானிய பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான வாய்ப்பினை ஜப்பான் அரசு வழங்குகிறது. ஜப்பானிய மாணவர்களுடன் கலந்து பழகி சர்வதேச ரீதியிலான தமது புலமையை வெளிப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையில் போட்டிக்குரிய சர்வதேச வேலை வாய்ப்புக்கான சந்தை வாய்ப்புக்களை எதிர்கொள்ளக்கூடியவர்களாக அவர்களைத் தயாரித்து வெளிக்கொண்டு வரும் விதத்தில் கல்வி புகட்டக்கூடிய 13 பல்கலைக்கழகங்கள் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பட்டப்படிப்புக்கான கல்வித்திட்டங்கள் ஆங்கிலம்மூலம் நடத்தப்படுவதால் இவற்றுக்கு ஆரம்பத்தில் ஜப்பான் மொழிப் பரீட்சயம் பெரிதும் அவசியப்படாது. இந்தவிதமான ஒரு கல்வித்திட்டம் பற்றிய போதிய அறிவு இலங்கையர்களுக்கு இல்லாத காரணத்தினால் இவற்றுக்கு அவர்கள் விண்ணப்பிப்பதில்லை என ஜப்பானில் கல்வி கற்கும் மாணவரொருவரது தந்தையாகிய திஸ்ஸ செனதீர கூறுகிறார். கல்வி கற்கும் மாணவர்களுக்கு அவர்களது மாதாந்த செலவுத் தொகையாக 50,000 ஜப்பானிய யென் (50,000 JPY) வழங்கப்படுவதுடன் மற்றுமொரு தொகையான 25,000 (JPY) ஜப்பானிய மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதன் மூலம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படுவதாக அவர் கூறுகிறார்.

மாணவர்கள் தமக்கான அந்தக்கல்வியை ஒரு கலைபோல மிக இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடிய இயல்பான சூழ்நிலையில் நுண்ணாய்வு, கணனி மற்றும் நூல் நிலைய வசதிகள் கொண்ட சிறந்த பல்கலைக்கழகங்களை இந்த குளோபல் திட்டங்களுக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குளோபல் 30 கல்வித்திட்டத்திற்கான பல்லைக்கழகங்கள் பற்றிய தகவல் மூலங்கள் வருமாறு,

- University of Tokyo
- Nagoya University
- Kyoto University
- Osaka University
- Kyushu University
- University of Tsukuba
- Tohoku University
- Keio University
- Sophia University
- Meiji University
- Waseda University
- Doshisha University
- Ritsumeikan University

Brochures are available below as PDF files.

Guide of G 30 Universities

http://www.uni.international.mext.go.jp/documents/g30univguide 201512.pdf

Degree Courses at G30 Universities

http://www.uni.international.mext.go.jp/documents/g30courses 201510.pdf


Undergraduate Courses at G30 Universities

http://www.uni.international.mext.go.jp/documents/admissions g30ugcourses 201510. pdf

Scholarships for G30 programs

http://www.uni.international.mext.go.jp/documents/g30scholarship 201510.pdf





வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் அண்மையில் ஆரம்பமானது. (படங்கள்:- ஜெ.சிந்துஜா)

# பன்னாட்டு மாணவர்கள் யாழ்ப்பாணத்தில்...







(கொழும்பு)

பொருளாதார மற்றும் வர்த்தக விஞ்ஞான மாணவர்களின் சர்வதேச அமைப்பைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மரநடுகை செய்துள்ளனர். திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் வடக்கு சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் மரக்கன்றுகளை நடுகை செய்துள்ளனர்.

பல்வேறு நாடுகளையும் சேர்ந்த உயர்கல்வி பயிலும் மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஐசெக் (AIESEC) எனப்படும் இவ்வமைப்பு அரச சார்பற்ற மற்றும் அரசியல் சார்பற்ற ஒரு அமைப்பாகும். இது அனுபவங்களையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதன் மூலமும் தனிமனித ஆளுமையை விருத்தி செய்வதன் மூலமும் மானுடத்தின் முக்கியத்துவத்தை முழுமைபெறச் செய்யவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் முயன்று வருகிறது.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு சர்வதேச ரீதியில் இயங்கிவரும் ஐசெக்கின் 20 மாணவர்கள் இலங்கை களனி பல்கலைக்கழகத்துக்கு தற்போது வருகைதந்துள்ளனர். களனி பல்கலைக்கழகத்தின் சூழல் பேணல் மற்றும் சூழல் முகாமைத்துவக் கற்கைநெறி பயிலும் மாணவர்களுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் 'பசுமையை நோக்கி' என்னும் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இதில் ஒரு கட்டமாகவே இன்று திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இப்பன்னாட்டு மாணவர்கள் ஒன்று கூடி மர நடுகையில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்ச்சியில் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா. யாழ். கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.சண்முககுமார். நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எவ்.எக்ஸ்.அன்ரன். முத்துத்தம்பி மகாவித்தியாலயப் பிரதி அதிபர் க.மகேஸ்வரன் ஆகியோரும் முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவர்களும் கலந்துகொண்டிருந்தார்கள். (இ-5)

# பிரிட்டனின் சிறந்த பிரதமர் டேவிட் கமரூன்



(லண்டன்)

பிரித்தானியாவின் சிறந்த பிரதமர் யார் என்ற கருத்துக் கணிப்பை த டைம்ஸ் நிறுவனம் நடத்தியது.

இதில் 32 சதவீத மக்கள் முன்னாள் பிரதமரான டேவிட் கமரூனுக்கு வாக்களித்துள்ளனர்.

இவருக்கு அடுத்தபடியாக டோனிபிளேர் (Tony Blair) 20 சதவீதமும், ஜான்மேஜர் (John Major) 14 சதவீதமும். கோர்டன் பிரவுன் (Gordon Brow) 9 சதவீதமும் வாக்குகள் பெற்றுள்ளனர். மக்களால் சிறந்த பிரதமராக டேவிட் கமரூன் தெரிவாகி இருப்பதால், தற்போதைய பிரதமரான தெரசா மே-யின் செல்வாக்கு குறைந்து வருவதாக கூறப்படுகிறது. (இ-5)

## ஆண்டு விழாவும் பாலர் தின விழாவும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 49 ஆவது ஆண்டு விழாவும் பாலர் தின விழாவும் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இடம்பெறும்.

கணபதி படிப்பக தலைவர் பூ.அக மணிதேவர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற செயலாளர் சந்திரசேகரம் பிரசாத் கலந்துகொள்வார். (இ-3)

## எல்லையை மீளத் திறக்க இணக்கம்



வெனிசுவெலா மற்றும் கொலம்பிய நாடுகளுக்கு இடையேயான எல்லைப் பகுதியை மீளத் திறக்க, இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெனிசுவெலா ஜனாதிபதி சிக்கோலா மடுரோ மற்றும் கொலம்பிய ஜனாதிபதி ஜுவான் மனுவல் சாண்டோஸ் ஆகியோருக்கிடையில் கிழக்கு வெனிசுவெலா நகரான புயர்ட்டோ ஆர்டாஸில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து எல்லைப்பகுதியை மீளத் திறக்க இணக்கப்பாடு எட்டப்பட்டது. (இ-5)

# ஐ.நா.யோசனையை எதிர்கொள்ளும் இயலுமை இல்லாத காரணத்தால்தான் முன்கூட்டியே தேர்தலை நடத்தினார் மகிந்த

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

***ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட யோசனையை எதிர் கொள்ளும் இயலுமை இல்லாத காரணத்தினால்தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த முன்கூட்டியே தேர்தலை நடத்தியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.***



நாடு 9 ஆயிரத்து 500 இலட்சம் கோடி ரூபா கடனில் மூழ்கியுள்ளது எனவும் இந்த கடன் பொறியில் இருந்து தப்பிப்பதற்காவும் முன்னாள் ஜனாதிபதி பதவிக்காலம் முடிய இரண்டு வருடங்கள் எஞ்சியிருக்கும் நிலையில் தேர்தலை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் பெண் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளுக்கான பயிற்சிப் பாசறையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்பட்ட கடிதங்களை கிழித்த முன்னாள் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் கட்சியில் இருந்து தாமாகவே விலகிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் எனத் தெரிவித்தார். (இ-7-10)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் தென்கொரிய பிரதமருக்குமிடையில் சந்திப்பு



(கொழும்பு)

தென்கொரியாவிற்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் தென்கொரிய பிரதமர் ஹ்வான் கியோ ஆனிற்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்போது இலங்கையின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் பொருளாதார வளர்ச்சிக்குத் தென்கொரியா உதவிகளை வழங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7-10)

# நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டமூலம் புலம்பெயர் தமிழர்களின் தேவையே - நாலக

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனவர்களைத் தேடும் செயலகத்தை ஸ்தாபிக்கும் சட்டமூலம் புலம் பெயர் தமிழர்களின் தேவைக்காக கொண்டுவரப்பட்டுள்ளதாக தேசிய உரிமை அமைப்பின் தலைவர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.


புலம்பெயர் தமிழர்கள் போன்ற பிரிவினைவாதிகள் அவர்களுக்குத் தேவையான வகையில் நாட்டுக்கு எதிராக மனித உரிமை என்ற பெயரில் நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு செல்லும் மனித உரிமை பேரவை ஊடாக இந்தச் செயலகம் இயக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பெங்கமுவே நாலக தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கையெழுத்திட்டு ஐ.நா மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட அமெரிக்காவின் யோசனையில் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தை ஸ்தாபிப்பது, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, நிவாரணம் வழங்கும் செயற்பாடுகள், காணாமற்போனவர்களைத் தேடி அறியும் செயலகம் என்பவற்றை ஸ்தாபிப்பது உட்பட நான்கு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

காணாமற்போனவர்களைத்தேடும்செயலகத்திற்கு நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்கள் உள்ளன.

சாட்சியங்களாக வெளிநாடுகளில் இருந்து காணொலிகளை அனுப்ப முடியும். இந்த செயலகம் மேற்கொள்ளும் விடயங்களுக்கு எதிராக எவரும் செயற்பட முடியாது.



இந்த செயலகமானது பயங்கரவாதத்தை ஒழித்த படையினர் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் பயங்கரவாதத்தைப்பாதுகாப்பதற்கும் ஏற்படுத்தப்பட்ப் போகும் செயலகம் எனவும் பெங்கமுவே நாலகதேரர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் தொடர்பில் தீர்வு பெற்றுக்கொள்ள விசேட குழு நியமனம்

(கொழும்பு)

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் தொடர்பில் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் தீர்வுகள் எட்டப்படுமென போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சோமவீர தெரிவித்தார்.

இந்தக் குழுவில் தொழில் ஆணையாளர், பொலிஸார், திறைசேரி மற்றும் ரயில்வே பொது முகாமையாளர், போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

புகையிரத கடவைக் காப்பாளர்களின் கோரிக்கைகளுக்கு இந்த குழுவின் ஊடாக தீர்வு வழங்குவதற்கு எண்ணியுள்ளதாக போக்குவரத்து அமைச்சின்செயலாளர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## நம் தவறுகளைப் பிறர் பெரிதுபடுத்தாமல் இருக்க என்ன வழி?

செய்தது எவ்வளவு பெரிய தவறாக இருந்தாலும் நாம் மன்னிக்கப்பட வேண்டும் என எல்லோருமே எதிர்பார்க்கிறோம்.

இது ஒரு நியாயமான மனித உணர்வுதான். ஆனால் தவறு எத்தகையது? சாதாரணமானதா, கடுமையானதா, வேண்டும் என்றும் உள்நோக்கத்தோடும் செய்யப்பட்டதா, அல்லது தெரியாமல் நடந்த தவறா என்பதைப் பொறுத்தே, பிறர் அதைப் பெரிதுபடுத்துவதும் பெரிதுபடுத்தாததும் அடங்கியிருக்கிறது.

இமாலயத் தவறு என்றால் அது தெரிந்து செய்யப்பட்டாலும் தெரியாமல் செய்யப்பட்டாலும் மன்னிக்கப்பட முடியாது. அதற்குரிய விளைவுகளை அல்லது தண்டனையை நாம் அனுபவித்தே ஆக வேண்டும்.

சிறுசிறு தவறுகள் என்று சொல்லப்படுவதற்கும் இமாலயத் தவறுகளுக்கும் இடைப்பட்ட தவறுகளைப் பொறுத்தவரை செய்யப்பட்ட சூழ்நிலை, அதன் பின்னணி ஆகியவற்றோடு நம்முடைய இயல்பு என்ன, தவறு செய்வதே நம் தொழிலா? என்றெல்லாம் பார்த்து இதைப் பெரிதுபடுத்துவதா? வேண்டாமா? என்று முடிவு செய்வார்கள்.

நமக்குத் தெரிந்தவர்கள் அல்லது மிக வேண்டியவர்கள் நம்மீது கொண்டிருக்கும் பிரியத்தின் காரணமாக நம் தவறுகளை வேறு வழியின்றிப் பெரிதுபடுத்தாமல் இருக்கலாம். ஆனால், முன்பின் தெரியாதவர்களிடத்தில் இத்தகைய ஒரு சலுகையை நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே, முன்பின் தெரியாதவர்கள் விடயத்தில் நாம் சற்றுக் கூடுதல் விழிப்போடு செயற்பட வேண்டும். ஒருவேளை இத்தகைய விழிப்பையும் மீறித் தவறு நடந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம்.

அந்த நிலையில், நான் செய்தது பெரிய தவறாக்கும்? தவறு செய்வது மனித இயல்பு தானே. நீ என்ன என் தவறைப் பெரிதுபடுத்துவது? உன்னால் ஆனதைப் பார்! என்ற விரோதப் போக்கைக் கையாளாமல் நடந்து விட்டது தவறு தான். இதைத் தயவு செய்து பெரிதுபடுத்தாதீர்கள் என்பதைப் பேச்சாலும் முக வெளிப்பாடுகளாலும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

தவறு நடந்ததைப் பற்றி வருத்தப்படுகிறோம், தவறு தான் என்பதை நன்கு உணர்கிறோம், அவர்களுடைய கருணைப்பார்வையை எதிர்பார்க்கிறோம் என்பதை நாம் மற்றவர்களுக்கு உணர்த்திவிட்டோமானால் நம்முடைய தவறுகளைப் புதியவர்கள் கூடப் பெரிதுபடுத்த மாட்டார்கள்.

மாறாக நேர் விரோதப் போக்கைக் கடைப்பிடித்து என்னவோ கொலை செய்துவிட்ட மாதிரியெல்லோ என்னை நடத்துறீங்க? என்கிற பாணியில் போனால் நம்முடைய ஒரு சாதாரண தவறுகூடக் கொலைக்குற்றத்திற்கு இணையாகப் பெரிதுபடுத்தப்படும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

இறுதியாக ஒன்று, இது நமக்கு மிக வேண்டியவர்கள் வட்டத்திற்கே அதிகம் பொருந்தும்.

அதாவது, வங்கியில் ஒரு கணிசமான தொகையைச் சேர்த்து வைத்திருந்து, ஒரு சிறு தொகையை இறக்கினால், எப்படி அது ஒரு பொருட்டில்லையோ அதேபோல் நாம் பல வழியாலும் நல்ல பெயரைச் சம்பாதித்து வைத்திருந்தோமானால் நாம் செய்யக் கூடிய தவறுகள் பெரிதுபடுத்தப்படமாட்டா. பாவம்! ஏதோ தெரியாமல் நடந்து விட்டது. அவர் அப்படிப் பட்டவரே இல்லை என நமக்காகப் பரிந்து பேசும் சூழ்நிலை நிச்சயம் உருவாகும்.

**லேனா தமிழ்வாணன்**

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## English Part I

Test 6

Write a paragraph on one of the following topics in about 50 to 60 words. Use the guidelines given.

(i) The uses of a school library.
- Types of different reading materials available
- How it helps in your studies

OR

(ii) Animals are our friends.
- How animals help us
- How we can protect them

Test 7

Read the following passage and answer the questions.

Rice is low-fat and high in energy, and you can mix it with just about anything to make a wide variety of tasty nutritious dishes. Ask anyone from any country in the world to tell you their favourite rice recipe and you will get a wide selection, ranging from sushi in Japan to risottos in northern Italy.

Rice is closely connected to the culture of many societies. Hindu and Buddhist religions use rice as a religious offering. Burmese folklore uses rice as a central part of their creation story; the gods gave the first people of Burma rice seeds and directed them to Burma, where the rice would grow well. Chinese myth tells how, after severe floods, there was nothing to eat and the people were starving. One day they saw a dog coming across the fields, and hanging onto the dogs tail were bunches of long yellow seeds. The seeds grew into rice and the people survived.

The demand for rice is growing steadily, with consumption stretching beyond the traditional rice growing areas in Asia. You can find rice fields in Europe, Latin America and Australia. However, Asia is still the biggest rice producer, accounting for 90% of the world's production and consumption of rice.

Rice is a staple food for many countries. As the world population increases, can rice keep up to meet growing demands? Rice production has to be raised by at least 70% over the next three decades. The area devoted to rice cultivation cannot grow so much international research is being done to find ways of growing rice on less land.

1 Name two qualities of rice.

a)................................. b) ...........................................

2. What did the gods give the first people of Burma?

..........................................................................................

3. Where does the biggest harvest of rice come from?

..........................................................................................

4. What do the researchers try to find?

..........................................................................................

5. The word 'starving' means,

a) very cold b) very thirsty c) very hungry

Test 8

The Art Society of your school has organized the " Annual Art Day". You are the secretary of the Art Society. Write an invitation to your Principal and teachers for the event. (Use about 50 words.)

Include the following :
- Name of the function
- Date, time and venue
- The chief guest
- Special events of the programme

## English Part II

Test 9

Read the sentences and use the correct form of the word given within brackets. The first one is done for you.

1. The thief entered the shop and took all the ...valuable... [value] jewellery.
2. There is an ................ [exhibit] on handicraft at the B.M.I.C.H.
3. That plot of land will be sold after .............. [develop].
4. Ruchira's little sister is very talkative and ................... [friend].
5. You can never rely on a friend who is not ................ [support].
6. My father is working in Oman as a driving ................. [instruct].

Test 10

Read the following letter. In each line one word is incorrect and it is underlined. Write the correct word in the space provided. *The first one is done for you.*

Dear Kasun,
Today is our third day in Galle.
My cousins also join us. We — 1...joined......................
took our's dog, Brown also with us. — 2...........................................
Last evening we play at Galle Fort. — 3...........................................
We enjoyed a lot watch — 4...........................................
the setting son. My aunt Rani — 5...........................................
will coming from Australia tonight. — 6...........................................
She is going to spent a week with — 7...........................................
us. My father has bought six ticket for — 8...........................................
a drama. Tomorrow we'll go to sea it. — 9...........................................
We're having a real good time. I'll — 10.........................................
bring you a gifts when I come. — 11.........................................
With love,
Lahiru.

Test 11

**Picking teams**

When we pick teams in the playground,
Whatever the game might be.
There's always somebody left until last
And usually it's me.

I stand there looking hopeful
And tapping myself on the chest,
But the captains pick the others first,
Starting, of course, with the best.

Maybe if teams were sometimes picked
Starting with the worst,
Once in his life a boy like me
Could end up being first!

- Allan - Ahlberg



Read the poem and answer the questions given below.


• Underline the correct answer.

1. The poem is about
   a) selection for a drama
   b) selection for a team
   c) selection for an orchestra.
2. Write the line which says that the boy is waiting to be selected to the team?
3. Who picks the best players?
4. Write words which rhyme with the following words.
   a) be .......................
   b) chest .......................
5. (a) What do you feel for the boy in the poem?
   (b) Why? ...........................................

Test 12

Here are some utterances between a teacher and some students about going on a trip. Write what they said in " reported speech"

The first one is done for you.




(1) The teacher said that we had to come at 5 a.m

(2) ..........................................................................

(3) ..........................................................................

(4) ..........................................................................

(5) ..........................................................................

(6) ..........................................................................

Test 13

Fill in the blanks in the following text using the words given in the box.

| | | | | |
|---|---|---|---|---|
| avoiding | even | hot | kidney | unbearable |
| day | foods | if | problem | you |
| due | glasses | in | to | |

It was believed that only people above 40 years can have problems with stones in the kidney.

But (1) ............................ youth are suffering from this (2) ............................ nowadays. This ailment arises mainly (3) ............................ to wrong eating habits. Present (4) ............................ youth are interested in consuming (5) ............................, spicy, salty and fatty fast (6).......................... together with artificially sweetened drinks. (7) ............................ you feel irritation while passing urine (8) ..........................should consult your doctor early. (9) ............................pains are also signs of stones (10) ............................the kidney. It is easy (11) ............................ prevent stone formation in the (12) ............................ by drinking six to eight (13) ............................ of water daily and also (14) ............................ acidic items like tomato, grape fruit, pineapple etc. should be done. Native doctors say that some local herbal medicines are good for kidney.

Test 14

You attended your cousin's wedding last week. Write a letter to your aunt in Canada describing the event. (Use about 100 words.)


- When and where it was held.
- Who you went with.
- What you saw at the wedding.
- Your feelings about the event.
- Any interesting experience.

OR

The following bar chart shows how the grade 11 students of City Central College get information.

Study the bar chart and write a description about it. (Use about 100 words.)

The words/phrases given in the box will help you.




most of the studeuts ...
the majority of ...
lowest number of ...
most popular ...
less popular than ...
equal ...
equally

(10 marks)

Test 15

**Read the following passage and answer the questions**

The silence of the Reference Library was broken only by an occasional cough now and then by the scarcely audible sound of pages being turned over. There were about twenty people in the room, most of them with their heads bent over their books. The assistant librarin who was in charge of the room sat at a desk in one corner. She glanced at Prabath as he came in, then went on with her work. Prabath had not been to this part of the library before. He walked around the room almost on tiptoe. He was afraid that he would disturb the industrious readers with his heavy shoes. The shelves were filled with thick volumes: dictionaries in many languages, encyclopaedias, atlases, biographies and other works of reference. He found nothing that was likely to interest him, until he came to a small section on photography, which was one of his hobbies. The books in this section were on a high shelf out of his reach, so he had to fetch a small ladder in order to get one down. Unfortunately, as he was climbing down the ladder, the book he had chosen slipped from his grasp and fell to the floor with a loud crash. Twenty pairs of eyes looked up at him simultaneously annoyed by this unaccustomed disturbance. Prabath felt himself go red as he picked up his book, which did not seem to have been damaged by its fall.

(See Page 16)

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## English Part I Answer

Test 1

| | |
|---|---|
| (3) g. (stamps) | (8) d. (books) |
| (4) a. (post office) | (9) e. (fair) |
| (5) f. (restaurant) | (10) j. (vegetables) |
| (6) i. (sandwiches) | (11) l. (bank) |
| (7) h. (library) | (10) b. (money) |

Test 2

(a) 5 (b) 6 (c) 1 (d) 3 (e) 2 (f) 4

Test 3

(2) The boys are going to finish the race
(3) Rajini is going to cut the cake
(4) The children are going to play cricket
(5) Nilushi is going to sweep the floor / room
(6) The man is going to climb the coconut tree

Test 4

(1) Nugegoda (2) Junior (3) non members
(4) six (5) locker

Test 5

My sister is Sumudu and I call her 'Sudu'. She is fifteen years old. She has long hair and black eyes. She usually wears skirts and blouses as well as frocks. She likes classical music, dancing and playing netball.

Test 6

content

| | |
|---|---|
| 2 | All points included |
| 1 | Most of the points included |
| 0 | Question copied / Totally irrelevant |

Language

| | |
|---|---|
| 3 | Almost no errors, well connected sentences, correct spelling and punctuation. |
| 2 | Few errors, well connected sentences, Few errors in spelling and punctuation. |
| 1 | Only a few correct sentences |
| 0 | All sentences incorrect |

Test 7

(1) a) low in fat b) high in energy (2) rice seeds
(3) Asia (4) ways of growing rice on less land. (5) c

Test 8

Content

| | |
|---|---|
| 2 | All points included |
| 1 | Most of the relevant points included |
| 0 | Question copied / Totally irrelevant |

Language

| | |
|---|---|
| 3 | Almost no errors, well connected sentences, correct spelling and punctuation. |
| 2 | Few errors in spelling and punctuation, correct format. |
| 1 | Less poinsts, Many errors in spelling and punctuation, Some errors in format. |
| 0 | All copied / Totally irrelevant |

### English Language - Paper II

Test 9

(1) exhibition (2) development (3) friendly
(4) supportive (5) instructor

Test 10

(2) our (3) played (4) watching
(5) sun (6) come (7) spend
(8) tickets (9) see (10) really (11) gift

Test 11

(1) b (2) I stand there looking hopeful
(3) The captains (4) a) be - me b) chest – best
(5) a) sorry / sympathy / sad
b) Because he was not selected to the team (any relevant answer)

Test 12

(1) Sandun said that he would bring breakfast for all.
(2) Samadhi said that she would not be able to come by 5.00 a.m.
(3) Pathum said that he was going to borrow his brother's guitar.
(4) Menushi said that she had bought a new cap for the trip.
(5) Rizmina said that she would be joining her friends on the way.

Test 13

(1) even (2) problem (3) due (4) day (5) hot
(6) foods (7) if (8) you (9) unbearable (10) in
(11) to (12) kidney (13) glasses (14) avoiding

Test 14

Content - Informal Letter

| | |
|---|---|
| 3 | All points included |
| 2 | Most of the points included |
| 1 | Only a few points included |
| 0 | Totally irrelevant / Question copied |

Content - Bar chart

| | |
|---|---|
| 3 | Correct interpretation of the bar chart. All sources of information included. |
| 2 | Correct interpretation. Most of the sources of information included. |
| 1 | Insufficient interpretation. |
| 0 | Totally irrelevant / Question copied |

14. A & B

Language

| | |
|---|---|
| 3 | Almost no errors. well-connected sentences, good range of vocabulary |
| 2 | few errors, well connected sentences, limited vocabulary |
| 1 | Only a few correct sentences. Limited vocabulary. |
| 0 | All sentences incorrect |

14. A & B

Format and Organization

| | |
|---|---|
| 2 | Well organized ideas, connected meaningful paragraphs. Correct format of an informal letter / interpretation |
| 1 | Ideas not well connected, errors in format |
| 0 | No organization at all |

14. A & B

Mechanics of writing

| | |
|---|---|
| 3 | No spelling errors, Correct punctuation, Clear handwriting |
| 2 | Handwriting clear but a few errors in spelling and punctuation |
| 1 | a few errors in spelling and punctuation |
| 0 | not attempted / irrelevant |

Test 15

(1) (a) T (b) T (c) F (d) F
(2) Dictionaries, encyclopaedias, atlases, biographies, photography
(3) He walked around the room almost on tiptoe.
(4) photography
(5) The book slipped and fell
(6) a) assistant librarian
b) reference library
(7) a) hobbies
b) simultaneously

Test 16

16 a

Content - Essay

| | |
|---|---|
| 4 - 5 | All points included. Essay is of required length. clear description of the guidelines. |
| 3 | Most of the points included. Sufficient ,clear description of the guidelines . Essay is of required length. |
| 1 | Only a few points included |
| 0 | Question copied/ Totally irrelevant |

(Monday will be Published)

Continued on Page 15

He had just sat down when he found the young lady assistant standing alongside him. "You must be more careful when you are handling these books," she said severely. Satisfied that she had done her duty, she turned to go back to her desk. Then a sudden thought struck her. "By the way, how old are you?", she asked Prabath. "Thirteen," he told her. "You're not allowed in here under the age of fourteen, you know," the assistant said. "Didn't you see the notice on the door? Prabath shook his head. He expected the assistant to ask him to leave. Instead, in a more kindly tone, she sai,> "Well, never mind, but make sure that you don't disturb the other readers again, otherwise I shall have to ask you to leave." Adapted by - Donn Byrne

1. Say whether the following statements are true or false. Write 'T' or 'F' in the given boxes.
(a) The Reference Library was calm and quiet.
(b) Prabath was not familiar with this part of the library.
(c) He found nothing interesting in the reference library.
(d) Prabath was fourteen years old.
2. Name two types of books that were on the shelf?
(a) .............................. (b) ..............................
3. Write the sentence that says that Prabath moved around the room as quietly as he could.
4. Mention Prabath's hobby given in the text
5. What happened as he was climbing down the ladder?
6. What do the following words in the passage refer to?
(a) "She" in line 4 ..............................
(b) "here" in line 18 ..............................
7. Find the word from the paragraph which is closest in meaning to the following words.
(a) pastimes ..............................
(b) happening at the same time ..............................

Test 16

Write on one of the following. Use about 200 words.

(a) Write an essay on the following topic.
"Strong family bonds are becoming weak in the modern world"
include the following
- importance of family bonds
- reasons for weak family bonds
• social competition
• attention to money
• busy life style
• new technology (computer, internet, mobile, TV, etc)

(b) - Write the speech you would make at the Environment Day celebrations at your school.
"Trees : a valuable gift of nature"

(c) - Write an article to the school magazine on "Importance of a balanced diet".

(d) - Ravi and Nuwan are two friends studying in the same class for the G.C.E. O/L examination. Ravi doesn't do any extra activity but he studies hard. Nuwan is a clever volleyball player. He gets absent in most of the afternoon classes. Ravi is worried about his friend and decides to talk about it with him.
Write the dialogue that would take place between Ravi and Nuwan.
Start in the following way:
Ravi : Oh. Nuwan, even today, you have missed your class. Please stop practices now. We have only three more months for the exam.
Nuwan : But I should attend practices regularly as we have our final matches next week. You know Ravi, I study at night. Why don't you think that sports and games are also important?

◆ ◆ ◆

# ராணுவ கண்காணிப்புடன் கஞ்சா வளர்க்கத் திட்டம்

## அமைச்சர் ராஜித தகவல்

(கொழும்பு)

**இராணுவ கண்காணிப்பின் கீழ் கஞ்சா தாவரம் வளர்க் கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

ஆயுர்வேத மருந்துப் பொருட்களை தயாரிப்பதற்காக இவ்வாறு கஞ்சாசெடிகள் வளர்க்கப்பட உள்ளன. இதன் முதல் கட்டமாக மத்துகம பிரதேசத்தில் அறுபது ஏக்கர் காணியில் கஞ்சா செடிகள் வளர்க்கப்படவுள்ளன. இதுவரை காலமும் நீதிமன்றினால் அரசுடைமையாக்கப்பட்ட கஞ்சா போதைப் பொருளே ஆயுர்வேத மருந்துப்பொருள் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் வளர்க்கப்பட்டு, பிடிக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கும் இந்த கஞ்சா தாவரத்தின் மருத்துவ குணங்கள் குறைந்து விடுகின்றன. எனவே நேரடியாக கஞ்சா செடிகளை மருந்துப் பொருள் உற்பத்திகளுக்காக பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இராணுவ கண்காணிப்பின் கீழ் கஞ்சா வளர்க்கப்பட்டு அவை மருத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ளப்பட உள்ளது என அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார். (இ-7-10)

# கிட்ஸ் வேல்ட்டின் 11 ஆவது விளையாட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

எவர்சைன் கிட்ஸ் வேல்ட்டின் 11 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

எவர்சைன் கிடஸ் வேல்ட் இயக்குநர் சிவனருட்சீலர். செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் எம்.சத்தியகுமார் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் க.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வலம்புரிப் பத்திரிகை நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம், ஏசியன் அலையன்ஸ் பிராந்திய முகாமையாளர் கு.சிறிராம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# விபத்தில் படுகாயமடைந்த இராணுவ சிப்பாய்கள் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெதிதென்னப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இராணுவ சிப்பாய்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் எல்ப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதால் ஏற்பட்ட இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவ சிப்பாய்களே பலியாகியுள்ளனர், அநுராதபுரம் முகடவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களான கே.பி. நிஹால் பண்டார (வயது 47), கே.பி.என்.குணரத்ன (வயது 38) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில், வெலிக்கந்தை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இருப்பினும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இந்த விபத்தைத் எல்ப் ரக வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்ததுடன், வாகனத்தையும் கைப்பற்றி வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

இந்த விபத்துக் குறித்து வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7-10)

# இலங்கையின் இரண்டாவது தலைநகரமாகக் கடுவெல!

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது தலைநகரமாக கடுவெல நகரை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



இலங்கையின் தலைநகராக கொழும்பு உள்ள போதும், இரண்டாவது தலைநகரமாக பல நகரங்களை அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் கடுவெல நகரை இரண்டாவது தலைநகராக மாற்ற எதிர்வரும் வருடங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரை தொடர்புபடுத்தக்கூடிய அதிவேக பாதைகள் பல கடுவெல நகரில் அமைக்கப்படும். அதன் முதற்கட்டம் களனி பாலத்திலிருந்து ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மாலபே, கடுவெலயிலிருந்து கொழும்பை நோக்கியுள்ள வீதியில் ஏற்படும் வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில், புகையிரத சேவைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 808

Search for people, places and things Nagendram Home


**தர்சா**




**விநுஜன்**

தோல்வி
இதயத்துக்கு போகக் கூடாது
வெற்றி
தலைக்கு போகக் கூடாது

**சர்மி**




**நிலவன்**

வெகு அரிதாய் பகலில் தூங்கி, மாலையில் எழுந்தப்பின் விடிந்துவிட்டதா என்று தெரியாமல் குழம்பி தவித்த நாட்கள் எவ்வளவு அழகானவை?!



**வின்ஜக்சன்**

மீனாக பிறந்து சாவது என்று முடிவெடுத்துவிட்டால்.


பொழுதுபோக்கிற்கு மீன் பிடிப்பவனின் தூண்டிலில் சிக்காதே.

பிழைப்பிற்காக மீன் பிடிப்பவனின் வலையில் சிக்கிடு.

உன் மரணமும் ஒருவனை வாழ வைக்கட்டும்...!!!



**ராகுலன்**



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாடு திரும்பினார் மகிந்த



தென்கொரியாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை நாடு திரும்பியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு நேற்று முற்பகல் 10.05 மணியளவில் சிங்கப்பூர் விமான சேவைக்கு சொந்தமான SQ466 விமானத்தின் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிரான கூட்டு எதிர்க்கட்சியின் சர்வதேச பரப்புரையின் மற்றுமொரு கட்டத்தை தென்கொரியாவில் முன்னெடுப்பதற்காக மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த வாரம் தென்கொரியா சென்றடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தென்கொரியாவில் மகிந்த ராஜபக்ஷவுக்கும் தெனகொரிய பிரதமர் ஹ்வான் கியோ ஆனிற்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (இ-7-10)

# இலங்கை ஊடாக கடத்த முயன்ற 300 கிலோ கடல் அட்டை பறிமுதல்

இலங்கை வழியாக வளைகுடாநாடுகளுக்கு கடந்த திட்டமிட்டிருந்த30 இலட்சம் பெறுமதியுடைய அரியவகை கடல் அட்டைகளை இந்திய பொலிஸார் உயிருடன் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தியாவின் மண்டபம் மற்றும் வேதாளைப்பகுதிகளில் அரியவகை கடல் அட்டைகள் கடத்தப்பட்டு வருவதாக மெரைன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, அப்பகுதிகளில் பொலிஸார் ரோந்துப்பணியில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையிலேயே மண்டபம் கடற்கரைச்சாலையில் வாகன சோதனையின் போது, சநதேகத்திற்கு இடமான ஆட்டோ ஒன்றை பொலிஸார் பரிசோதனை செய்துள்ளனர். இதன்போதே ஆட்டோவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 300 கிலோ எடை கொண்ட தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகள் உயிருடன் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய மண்டபப்பகுதியைச் சேர்ந்த அப்பாஸ் என்ற நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 50 | 100 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 130 | 300 | 160 | 200 | 200 |
| தக்காளி | 50 | 40 | 30 | 60 | 60 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 60 | 80 | 80 | 90 | 80 | 100 |
| கோவா | 100 | 100 | 70 | 160 | 100 | 120 | 100 |
| கரட் | 110 | 200 | 100 | 120 | 120 | 140 | 100 |
| பூசணி | 40 | 60 | 40 | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 50 | 40 | 20 | 40 | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 100 | 90 | 80 | 90 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 50 | 50 | 50 | 80 | 80 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 90 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 200 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 | 40 | 50 | 80 | 30 |
| கருணைக்கிழங்கு | 120 | 150 | — | 120 | 120 | 160 | 160 |
| பயற்றங்காய் | 40 | 20 | 40 | 40 | 40 | 20 | 50 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 50 | 30 | 50 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 150 | 150 | 200 | 160 | 150 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 100 | 120 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 60 | 200 | 150 | 200 | 160 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 50 | 70 | 60 | 80 | 80 |
| கீரை – 1பிடி | 20 | 10 | 20 | 30 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 | 160 | 140 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 120 | — | 140 | 60 | 50 | 160 | 150 |
| முள்ளங்கி | 30 | 50 | 20 | 40 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 40 | 50 | 30 | 50 | 60 | 50 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகளுக்கு அரசு “கெடு” 251

**போர் முனையில் 2 இலட்சம் தமிழர்கள்**

தற்போது . விடுதலைப் புலிகள் 20 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு பகுதியில் மட்டுமே இருந்தனர். இந்தப் பகுதியில் தான் அரசால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வளைய பகுதியும் அமைந்துள்ளது. அந்தப் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகள் மீது இராணுவம் ஒரு வாரமாகத் தாக்குதலைத் தீவிரப் படுத்தியது. இரு தரப்பினருக்கும் உக்கிரமான சண்டை நடந்து வரும் இப்பகுதிக்குள் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் சிக்கி இருந்தனர்.

**பலியாகும் அபாயம்**

இராணுவம் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்தினால் போர் முனையில் சிக்கியுள்ள அப்பாவி தமிழர்கள் பெருமளவு கொல்லப்படும் அபாயம் உள்ளது. இதனால் உடனடி போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது.

**அமெரிக்கா வற்புறுத்தல்**

இதைத்தொடர்ந்து அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் போர் நிறுத்தம் செய்யும் படியும் பாதுகாப்பு வளைய பகுதிக்குள் தாக்குதல் நடத்தக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டன.

இதேபோல் விடுதலைப் புலிகளும் முடிவில்லாத பயனற்ற சண்டையை நிறுத்தி விட்டு பாதுகாப்பு வளைய பகுதியில் இருந்து பொதுமக்கள் வெளியேற வேண்டும் என்றும் வற்புறுத்தின.

**இராணுவத்தளபதி உத்தரவாதம்**

இந்த நிலையில் அமெரிக்க ராபர்ட் பிளேக், இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவைச் சந்தித்துப் பேசினார். அப்போது போர் முனையில் சிக்கியுள்ளவர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேறும் பொருட்டு ஒரு வாரம் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்.

ஒருவார போர் நிறுத்தம் செய்தால் விடுதலைப் புலிகள் மீண்டும் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு சண்டையிடுவார்கள். அல்லது விடுதலைப்புலிகளின் தலைவர்கள் நாட்டை விட்டு வெளியே தப்பி ஓடிவிடுவார்கள் என்று சரத் பொன்சேகா தெரிவித்தார். மேலும் போர் நிறுத்தம் செய்வது குறித்த முடிவை அரசாங்கம் தான் எடுக்க முடியும் என்றும் பொன்சேகா கூறினார்.

போர் முனைப்பகுதியில் சிக்கியுள்ளவர்கள் வெளியேற விடுதலைப்புலிகள் அனுமதித்தால் 48 மணி நேர (2நாட்கள்) போர் நிறுத்தத்திற்கு தான் உத்தரவாதம் தருவதாக ராபர்ட் பிளேக்கிடம் அப்போது அவர் உறுதி அளித்தார்.

**2 நாட்கள் போர் நிறுத்தம்**

இந்த நிலையில் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 12-04-2009 அன்று 2 நாட்கள் போர் நிறுத்தத்தை அறிவித்தார். நாட்டில் வசிக்கும் சமுதாயப் பிரிவினரும் 13-04-2009 அன்று சிங்கள புத்தாண்டையும் 14-04-2009 அன்று தமிழ் புத்தாண்டையும் கொண்டாடும் விதமாக இந்த 2 நாட்கள் போர் நிறுத்தம் அறிவிக்கப்படுவதாக அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 12ஆம் திகதி இரவு முதல் இந்தப் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

இது குறித்து வெளிநாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருந்ததாவது,

**சரண் அடையவேண்டும்**

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களையொட்டி இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருக்கிறார்.

பாதுகாப்பு வளைய பகுதியில் சிக்கியுள்ள பொதுமக்களின் நிலையை ஆழ்ந்து பரிசீலித்த இந்தப் பண்டிகைகளைக் கொண்டாடுவதற்குத் தகுந்ததொரு சூழ்நிலையில் அருமையான வாய்ப்பாக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பாதுகாப்பு வளைய பகுதியில் உள்ள மக்கள் எந்தத் தடையுமின்றி சுதந்திரமாக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு வரலாம். இந்த 2 நாட்களிலும் இராணுவத்தினர் தங்கள் தரப்பிலிருந்து எந்த வித தாக்குதல்களையும் மேற்கொள்ளமாட்டார்கள்.

உணர்வு பூர்வமான இந்தப் பண்டிகை காலத்தைப் பொருத்தமான தருணமாக ஏற்று விடுதலைப்புலிகள் தங்களின் தோல்வியை ஒப்புக்கொண்டு ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு சரணடைய வேண்டும். மேலும் விடுதலைப்புலிகள் தீவிரவாதத்தையும் வன்முறையையும் நிரந்தரமாக கைவிட வேண்டும்.

மேற்கண்டவாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

**மீண்டும் தாக்குதல்**

போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததும் 15-04-2009 அன்று காலையிலேயே மீண்டும் இராணுவம் வெறித்தாக்குதலைத் தொடங்கியது.

காலை 7.40 மணி முதல் 10.40மணி வரை முள்ளிவாய்க்காலில் இருந்து பொக்கணைவரை உள்ள பகுதியை நோக்கி ரொக்கெட் எறிகணை பீரங்கித் தாக்குதல் மற்றும் டாங்கி படையினரின் தாக்குதலுடன் கனரக துப்பாக்கித் தாக்குதலும் தொடர்ந்து நடைபெற்றது.

3 மணிநேரத்தில் நடைபெற்ற அந்தத் தாக்குதலில் மட்டும் பாதுகாப்புப் பகுதியில் இருந்த 180 தமிழர்கள் பலியானார்கள். ஏராளமானவர்கள் படுகாயமடைந்ததாக விடுதலைப்புலிகளின் ஆதரவு இணையத்தளமான தமிழ் நெட் தெரிவித்தது.

2 நாட்கள் போர் நிறுத்தத்தின் போது 815 தமிழர்கள் மட்டுமே பாதுகாப்பு வளைய பகுதியில் இருந்து அரசின் கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்ததாகவும் அந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.


**ஐ.நா.கோரிக்கை**

போர் நிறுத்தம் செய்யுமாறு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஐ.நா. சபை கோரிக்கை விடுத்தது.அதைத் தொடர்ந்து ஐ.நா.மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் கோரிக்கையை ஏற்று போர் நிறுத்தம் செய்வதாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர்.

ஆனால் அந்தப் போர் நிறுத்த அறிவிப்பை அரசு உடனடியாக நிராகரித்து விட்டது. அது குறித்து இராணுவ ஆலோசகரும் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தம்பியுமான கோத்தபாய ராஜபக்ஷ கூறியதாவது,

**மீட்பு நடவடிக்கை**

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்து இருப்பது நகைச்சுவையாக உள்ளது.



(தொடரும்)

# வடக்கில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள படைகளின் நிலஅபகரிப்பு விவகாரம்



வடக்கிலுள்ள தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது. தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவதன் மூலம் அரசாங்கமானது அனைத்துலக சமூகத்தைத் தவறாக வழிநடத்துவதாகவும் தமிழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனினும், வடக்கிலுள்ள தனியார் காணிகளைத் தாம் கையகப்படுத்துவதற்கான எவ்வித நகர்வையும் முன்னெடுக்கவில்லை என அரசாங்கம் கூறுகிறது. வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக மேலும் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான எவ்வித தேவையும் காணப்படவில்லை என அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் 'த சண்டே லீடர்' ஊடகத்திடம் தெரிவித்தார்.

வெளிப்படையாக மக்களின் காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் அதேவேளையில், வடக்கின் சில பகுதிகளில் இராணு வத்தினரால் நில அபகரிப்புக்களும் மேற்கொள் ளப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார். கடந்த வாரம் முல்லைத்தீவில் காணி அபகரிப்பு முயற்சி இடம்பெற்ற போது இதனைப் பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் தடுத்து நிறுத்தியதாகவும் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.


'இறுதி யுத்தம் இடம்பெற்ற முல்லைத்தீவின் வட்டுவாகலில் உள்ள சில தனியார் காணி களை நிரந்தரமாகத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் கடற்படையினர் இறங்கியு ள்ளனர்' என அவர் மேலும் தெரிவித்தார். இந்தப் பகுதியைச் சேர்ந்த 617 ஏக்கர் நிலங்களை நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அளக்க முற்பட்டதாகவும், இதனை எதிர்த்து அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதால் இறுதியில் அந்த முயற்சி இடைநிறுத்தப்பட்டதாகவும் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டினார்.

'இந்தப் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை நிலங்கள் பொதுமக்களுக்குச் சொந்தமானதாகும். ஆனால் தற்போது இது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் தற்போது இந்த நிலத்தை நிரந்தரமாகத் தமக்குச் சொந்தமாக்க முயற்சிக்கின்றனர்' என சுரேஸ் பிறேமச்சந்திரன் குற்றம் சுமத்தினார். கடற்படையினர் இந்தப் பகுதியைச் சூழவும் வேலிகள் அமைத்துள்ளதால் நில உரிமையாளர்கள் கூடத் தமது நிலத்தைச் சென்று பார்வையிட முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் ஆட்சியில் விசுவமடு உட்பட வடக்கின் சில பகுதிகளைச் சேர்ந்த 100 வரையான காணிகள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நிலங்களில் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.


இதேவேளையில், தனியார் காணிகளைக் கையகப்படுத்தும் அரசாங்கத்தின் கோட்பாடு மற்றும் கிராமப்புறங்களில் உள்ள அரசிற்குச் சொந்தமான நிலங்களை இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரின் தேவைக்குப் பயன்படுத்தும் நடைமுறையையும் தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

'தனியார் நிலங்களைக் கையகப்படுத்துதல் அல்லது பொதுமக்களின் குடியிருப்புக்கள் மத்தியில் உள்ள அரசநிலங்களில் இராணுவ முகாம்களை அமைத்தல் போன்றவற்றை அக்கட்சி எதிர்த்து நிற்கின்றது. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தனியார் காணிகளை அரசாங்கமானது கையகப்படுத்துவதற்கான நடவடிக்கையை எதிர்த்துப் பல்வேறு அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றன.



குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் உள்ள 617 ஏக்கர் தனியார் காணிகளை கடற்படையினர் தமது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதானது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது' என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் தற்போது நாட்டில் இயல்புநிலை திரும்புவதாகவும், ஆனால் தற்போதும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் இவ்வாறான சில பிரச்சினைகள் வடக்கில் அதிகம் இடம்பெறுவதால் மக்கள் மத்தியில் குழப்பநிலை காணப்படுவதாகவும் ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டினார்.



'அரசாங்கமானது சில பிரச்சினைகளுக்குத் துரித தீர்வை எட்ட வேண்டிய நிலையிலுள்ளது. இந்தவேளையில், வடக்கில் இராணுவ முகாம்களை அமைப்பதில் அரசாங்கம் தீவிரம் காட்டிவருகிறது. வடக்கில் இராணுவ முகாம் அமைப்பதற்கான அவசர தேவை ஏற்பட்டால் அதனை வெளிப்படையாகக் கூறவேண்டும்' என ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தனது நிலையிலிருந்து இறங்கி அரசாங்கத்திற்கு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வரும் நிலையில், அரசாங்கத்தின் இவ்வாறான சில செயல்கள் கூட்டமைப்பிற்கு அவமானத்தை ஏற்படுத்துவதாகவும் ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

'அரசாங்கத்திற்கு கூட்டமைப்பு வழங்கி வரும் ஆதரவை நிறுத்துவதற்கு நில விவகாரம் போதுமானதாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இதில் அங்கம் வகிக்கும் தனியொரு கட்சியின் நலனிற்காக தனது பெயரைத் தவறாகப் பயன்படுத்துகிறது. வடக்கு மற்றும் கிழக்கில் புதிய இராணுவ முகாம்கள் அமைப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இயலாது எனில், அவர்கள் தமது பதவிகளிலிருந்து விலகவேண்டும் என நான் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன்.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

# வடக்கில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள படைகளின் நிலஅபகரிப்பு விவகாரம்



(19ஆம் பக்கத் தொடர்ச்சி)
அரசாங்கம் இவ்வாறு புதிய இராணுவ முகாம்களை அமைப்பதற்கு அனுமதிப்பதன் மூலம் சிறுபான்மையினர் மத்தியில் ஏற்கனவே நிலவி வரும் அரசாங்கம் தமது பிரச்சினைகளை ஒருபோதும் தீவிரமாகக் கரிசனை கொள்ளாது என்கின்ற கருத்தை மேலும் நியாயப்படுத்த வழிவகுக்கப்படும் என ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டினார்.

இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் எரிச்சலை உண்டு பண்ணுகின்றன என்பதால் இவற்றுக்கு எதிராகக் கண்டனங்களை முன்வைக்க வேண்டும் என்பதை இந்த நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த நியாயமாகச் சிந்திக்கும் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் எனவும் கூறினார்.

'பொதுமக்கள் வாழும் பகுதிகளைத் தவிர்த்து முக்கிய இடங்களில் ஒன்று அல்லது இரண்டு இராணுவ முகாம்களை அமைக்கலாம். இதைவிட அதிகமான இராணுவ முகாம்களை அமைப்பதால் மக்கள் அச்சத்திற்கு உள்ளாகுகின்றனர்.

ஏற்கனவே இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களிடம் மக்கள் முறையீடு செய்துள்ள போதிலும் இது தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளைத் துறப்பதற்கான நேரம் வந்துவிட்டது என நான் நினைக்கிறேன்' என ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

எனினும், இவ்வாறான காணி அபகரிப்புக்கள் இடம்பெறுவதாகத் தனது அமைச்சு அறியவில்லை எனவும் தற்போதைய அரசாங்கத்தைப் பொறுத்தளவில் இராணுவத் தேவைக்காக காணியை அபகரிக்க வேண்டிய நிலை காணப்படவில்லை எனவும் புதிய முகாம்களை அமைப்பதற்கான தேவை தற்போது இல்லை எனவும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

'காணி அபகரிப்புச் சம்பவங்கள் எந்த இடங்களில் இடம்பெறுகின்றன என்பதை ஆனந்தசங்கரி எம்மிடம் தெரிவித்தால் நாங்கள் இது தொடர்பாக ஆராய்வோம். ஏனெனில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களை விடுவித்து மக்களை மீள்குடியேற்றுவதற்கான செயற்றிட்டம் தொடர்பில் எமது அமைச்சானது பாதுகாப்பு அமைச்சுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவருகிறோம்'



என அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரிலும் பேரவை உறுப்பினர்களாலும் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளராலும் கேள்வி எழுப்பப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(முற்றும்)

ஆங்கிலத்தில் - Easwaran Rutnam
வழிமூலம் - The Sunday Leader
மொழியாக்கம் - நித்தியபாரதி

# தமிழ் சினிமா வரலாறு

## சாதனை படைத்த சிவாஜியின் படங்கள் 231

டில்லி மேல் சபை (ராஜ்ய சபா) உறுப்பினராக சிவாஜி கணேசனை 19-02-1982 இல் மத்திய அரசு நியமித்தது.

1984 மார்ச் 24ஆம் திகதி 'பத்மபூஷண்' விருது வழங்கியது. (ஏற்கனவே அவர் 'பத்மஸ்ரீ' பட்டம் பெற்றிருந்தார்)

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 01-12-1986 இல் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. இவருடன் கிருபானந்தவாரியார், சி.சுப்பிரமணியம், பேராசிரியர் எஸ்.வி.சிட்டி பாபு ,தொழிலதிபர் சித்ரா நாராயணசாமி, டி.வி.ராமானுஜம் ஆகியோரும் வைத்தியர் பட்டம் பெற்றனர்.

சிவாஜிகணேசன் நடித்த மொத்த படங்கள் 305. அவற்றில் ஏராளமான படங்கள் சாதனை படைத்தவை.

சிவாஜி நடித்த முதல் படம் பராசக்தி 1952 தீபாவளிக்கு (17-10-1952) வெளிவந்தது.

### 305 படங்கள்

1952 முதல் 1999 வரை தமிழிலும் தெலுங்கு, இந்தி முதலான மொழிகளிலும் சிவாஜி நடித்த படங்கள் 287.

இவை தவிர 'மர்மவீரன்', 'தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை', 'குழந்தைகள் கண்ட குடியரசு', 'தாயே உனக்காக', 'சினிமா பைத்தியம்', 'நட்சத்திரம்', 'உருவங்கள் மாறலாம்' ஆகிய 7 தமிழ்ப்படங்களிலும்7 தெலுங்குப்படங்களிலும் 2 கன்னடப்படங்களிலும் ஒரு இந்திப்படத்திலும் கௌரவ வேடத்தில் நடித்தார். எனவே அவர் நடித்த படங்களின் எண்ணிக்கை 305 ஆகும்.

இவற்றில் 23 படங்கள் வெள்ளி விழா படங்கள்.

88 படங்கள் நூறு நாட்களுக்கு மேல் ஓடியவை.

### சாதனை

பல படங்கள் வசூலில் சாதனை படைத்தன.அது பற்றிய விபரங்களாவன,

பராசக்தி (17-10-1952) தமிழ்நாட்டில் 5 தியேட்டர்களில் வெள்ளி விழாவையும் 23 தியேட்டர்களில் 100 நாள் விழாவையும் கொண்டாடிய படம். திருச்சி வெலிங்டன் தியேட்டரில் 245 நாட்களும் இலங்கையில் கொழும்பு நகரில் உள்ள மைலன் தியேட்டரில் 294 நாட்களும் ஓடியது. வெளிநாட்டில் வெள்ளி விழா கொண்டாடிய முதல் தமிழ்ப் படம். 1962இல் தமிழ்நாடெங்கும் மீண்டும் திரையிடப்பட்ட போது பல ஊர்களில் 100 நாள் ஓடி சாதனை படைத்தது.

சம்பூர்ண ராமாயணம் (14-04-1958)மதுரை ஸ்ரீதேவியில் 24 வாரம். இதற்கிடையே உத்தமபுத்திரன்



சென்னையில் 21 வாரங்களும் சபாஸ் மீனா 23 வாரங்களும் ஓடின.

வீர பாண்டிய கட்ட பொம்மன்(16-05-1959)மொத்தம் 27 திரையரங்குகளில் நூறு நாள் கொண்டாடிய படம். மதுரை நியூ சினிமாவில் 181 நாட்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது. சென்னையில் சித்திரா கிரவுன், சயானி ஆகிய தியேட்டர்களில் மற்றும் சில வெளியூர்களிலும் 168 நாட்கள் ஓடி வெள்ளி விழாவை நெருங்கி கொண்டிருந்த போது தீபாவளிக்கு பாகப்பிரிவினை வெளியிடப்பட்டதால் 5 திரையரங்குகளில் நூலிழையில் வெள்ளி விழா நழுவியது.

பாகப்பிரிவினை (31-08-1959) மதுரை சிந்தாமணியில் 216 நாட்கள் ஓடியது. சென்னை கோவை, சேலம், நெல்லை, திண்டுக்கல், ஈரோடு ஆகிய ஊர்களில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது.

பாவமன்னிப்பு (16-3-1961) சென்னை சாந்தியில் 177 நாட்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது. தமிழ் நாட்டில் 18 திரையரங்குகளில் 100 நாட்களுக்கு மேல் 154 நாட்கள் வரை ஓடியது. இராமநாதபுரத்தில் சிவாஜி டூரிங் டாக்கீசில் 100 நாட்கள் ஓடிய படம் இதுதான் என்று கருதப்படுகிறது.

பாசமலர் (27-05-1951) தமிழ் நாட்டில் 18 திரையரங்குகளில் நூறு நாட்களுக்கு மேல் ஓடிய படம் . 6 தியேட்டர்களில் 23 வாரங்களைக் கடந்து ஓடியது. அவற்றில் சித்திராவில் வெள்ளிவிழா கொண்டாடியது.

(தொடரும்..)

நுகத்தடியில்லாத வண்டியையும் கடிவாள மில்லாத குதிரையையும் செலுத்த இயலாது. *- தமிழ் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லாட்சி என்பது நரியாட்சியாகுமா?

நல்லாட்சி என்று பெயர் சூட்டப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன-பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தமிழ் மக்களுக்கு என்ன செய்தது என்று கேட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு எதிர்க் கட்சித்-தலைவர் பதவியைக் கொடுத்ததைத் தவிர வேறு எதுவுமில்லை எனலாம்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இடங்களை விடுத்து அங்கு வாழ்ந்த மக்களை குடியமர்த்துதல், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் புனர்வாழ்வு, யுத்தத்தில் உயிர் இழந்தவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு-காணாமல்போனவர்களுக்கு நடந்ததென்ன என்ற விடயங்கள் தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நல்லாட்சி என்றால் அது தமிழர்களுக்கும் நல்லாட்சியாக இருக்க வேண்டும்.

ஆனால் நல்லாட்சி தமிழர்களின் விடயத்தில் நரி ஆட்சியாக செயற்படுகிறதோ என்று எண்ணும் அளவில் நிலைமை உள்ளது.

யுத்தத்தால் இனத்தையே அழியக் கொடுத்தவர்கள் தமிழர்கள்.

ஆனால், வட மாகாணத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் அமைச்சர் தமிழ் மக்களையும் தமிழர் அரசையும் இழிவுபடுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார்.

யுத்தத்தால் எல்லாவற்றையும் பறி கொடுத்த தமிழர்களை ஏறி மிதிக்கின்ற அளவில் ஒரு முஸ்லிம் அமைச்சர் செயற்படுகிறார் எனில், அவருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்? அதை தடுத்து நிறுத்தாதது ஏன்?

ஒரு சிறுபான்மை இனத்தின் அமைச்சரைக் கொண்டு தமிழ் மக்களை நசுக்க நினைப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த குறித்த முஸ்லிம் அமைச்சருக்கு எதிராக தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்தால் இரு இனங்களுக்குமிடையில் மோதல் உருவாகும் அல்லவா?

இந்த மோதலை உருவாக்கும் நோக்கிலேயே அந்த முஸ்லிம் அமைச்சர் செயற்படுகிறார் என்பது நல்லாட்சிக்குத் தெரியாதா? தெரிந்தால் அதைத் தடுக்காதது ஏன்? தமிழ் மக்களுக்கு எதைக் கொடுத்தாலும் அதை சிங்கள மக்கள் எதிர்ப்பர் என்பது போல ஒரு காட்டாப்பைக் காட்டி தமிழ் அரசியல் தலைமையை ஏமாற்றுகின்ற கொடுமைத்தனத்துக்கு ஓர் எல்லையே இல்லையா?

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்ததற்காக வற் வரியை ஏற்றிய போதிலும் அதையும் ஏற்று வரவு செலவுத்திட்டத்தை ஆதரிக்கக்கூடிய அறிவீனங்கள் தமிழ்த் தரப்பில் இருப்பதால் தமிழர்களை எப்படியும் ஏமாற்றலாம் என்று நினைப்பதுதான் நல்லாட்சி என்றால்,

அது ஒருபோதும் நல்லாட்சியாக இருக்கமுடியாது. மாறாக நரி ஆட்சி என்றே அதனை அழைக்கமுடியும்.

எதுவாயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமிழ் மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவது ஜனாதிபதியின் தார்மீகக் கடமை என்பதை மட்டுமே இப்போதைக்கு நாம் சொல்லி வைக்கமுடியும்.

## மரணதண்டனை அல்லது ஆயுள்தண்டனை; 68 வருடங்களில் 1,557 பேருக்கு விதிப்பு

கடந்த 68 வருடங்களில், 1,557 பேருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று, ஊடகத்துறை அமைச்சரும் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவுமான கயந்த கருணாதிலக. நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி தொடக்கம் 2016 ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி வரையிலான காலத்தினுள் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, அவர்களில் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை ஜயந்த சமரவீர எம்.பி கேட்டிருந்தார்.

அக்கேள்விகளுக்குப் பதிலளித்த ஆளுங்கட்சியின் பிரதம கொறடா. இக்காலப் பகுதியில் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1557 ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## தாய்லாந்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இலங்கையர்களுக்கு பாதிப்பில்லை

சுற்றுலா பயணிகள் அதிகம் செல்லும் நாடான தாய்லாந்தில் பல இடங்களில் நேற்று இடம்பெற்றுள்ள குண்டு வெடிப்பினால் நால்வர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை. நேற்று தாய்லாந்து மகாராணியின் பிறந்தநாள் என்பதால் இதனை குழப்புவதற்கு முன்னெடுக்கப்பட்ட சதி நடவடிக்கை எனறும். இது சர்வதேச பயங்கரவாத தாக்குதல் அல்ல என்றும், தாய்லாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த குண்டு வெடிப்புகளில் இலங்கையர் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என இலங்கை வெளியுறவு அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## நல்லூர்க்கந்தனுக்கு




### நல்லூர் வாசனே

இராகம்: பியாகடை தாளம்:ஆதி

**பல்லவி**

நல்லூர் வாசனே நம வேலவா
நாராயணன் மருகா வரஸ்ரீ முருகா

**அனுபல்லவி**

வேதோப தேசநீ விபுவேதிய
வித்தியாதர விமலா கந்தா குமர (நல்லூர்)

**சரணம்**

சித்திர மயிலேறு சந்த்ரா சத்தி தருமன்
தந்த்ரா முலே நோகல காரெனு
அந்தமில்லா ஸ்வர ஞானமு நீதரு
யோகசுவாமி வந்தனாசுலோக முவந்தருள்
(நல்லூர்)

சிவத்திரு யோகர்சுவாமிகள்

## யாழில் 66 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின்கீழ் கரையோர கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 66 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டின் கீழ் யாழ்.மாவட்டத்தில் கரையோரக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன் மீனவ சங்கங்களுக்கான உதவிகள் வழங்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கான அபிவிருத்தி திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். மோகன் தலைமையில் நேற்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மேற்படி திட்டத்திற்கான திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழில் சங்கங்கள் சமாசங்களின் பிரச்சினை தொடர்பாகவும் கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் ஒவ்வொரு மீனவ சமாசத்திலும் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக சென்று ஆராய்வதற்கு கூட்டுறவு ஆணையாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக குறித்த குழு எதிர்வரும் 18ஆம் திகதி வலி வடக்கு மீனவர் சமாசத்தின் பிரச்சினைகளை கேட்டு ஆராய்வதற்கான வடமராட்சியில் தற்காலிகமாக இயங்கி வரும் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து மீனவ சங்கங்களின் பிரச்சினைகளையும் குறித்த குழு நேரடியாகச் சென்று ஆராய்ந்து பிரச்சினைகளுக்கான உரிய தீர்வை பெற்றுக்கொடுக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## காணாமற்போனோர் குறித்த சட்டமூலம் உரியமுறையில் நிறைவேற்றப்படவில்லை

### கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

காணாமல்போனோர் அலுவலகம் குறித்த சட்டம் உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை என கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைப்பது குறித்து பாராளுமன்றில் சட்டம் நிறைவேற்றப்பட்டதனை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நிலையியற் கட்டளைகளின் அடிப்படையில் சபாநாயகர் இந்த சட்டத்தை உரிய முறையில் நிறைவேற்றவில்லை.

அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றில் ஆங்காங்கே நின்று கொண்டிருந்த போது இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவ்வாறு எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்ற முடியுமா? என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இக்காலத்துக்கு நீங்கள் மகா வீரரின் (அனுமான்) ஒழுக்கத்தை உங்களது இக்குறிக் கோளாகக் கொள்ள வேண்டும்.

❖ ஸ்ரீராமச்சந் திரரின் கட்டளைக்காக அவர் கடலைத் தாவியதைப் பாருங்கள். வாழ்வையோ. சாவையோ பற்றிய கவலை அவருக்கில்லை. அவர் தமது புலன்களை முழுவதும் வென்றவர்: ஆச்சரியமான புத்திக்கூர்மையுடையவர் ஒருவருக்காகப் பணி செய்தல் என்னும் பெரிய இலட்சியத்தை அடிப்படையாக்கி உங்கள் வாழ்க்கையை அதன் மீது கட்டுவது இப்போது அவசியமாகிறது. அதன் வாயிலாக ஏனைய இலட்சியங்கள் யாவும் சிறிது சிறிதாக வெளிப்படும்.


❖ எதிர்ச் சொல்லின்றி குருவிற்குக் கீழ்ப்படிவதும் பிரம்மச்சரியத்தைக் கண்டிப்பாக பின்பற்றுவதும் இதுவே வெற்றிக்கு இரகசியம். ஒரு புறம் பணி செய்யும் இலட் சியத்திற்கு உதாரணமாவது போன்று உலக முழுவதையும் அடக்கியாளும் வீரத்திற்கும் அனுமானே அறிகுறியாகின்றார்.

# இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## வதிரி டயமன்ஸ் வெற்றி







வடமராட்சி இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சுப்பர்-8 ஆட்டங்கள் மின்னொளியில் நடைபெற்று வருகின்றன. இதில் அண்மையில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் கும்பிளான் குறிஞ்சிக் குமரன் அணியை வீழ்த்தி வதிரி டயமன்ஸ் அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியும் மயிலங்காடு ஞான முருகன் அணியும் மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் 1:1 கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது. (க)

# பொன்னையா சிவபாதசிங்கம் ஞாபகார்த்த உதைபந்தாட்டம்

## அரியாலை ச.ச.நிலைய அணி சம்பியன்





அரியாலை திருமகள் சனசமூக நிலைய அணியை வீழ்த்தி சம்பியனாகியது அரியாலை சனசமூக நிலைய அணி.

அரியாலை சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு பொன்னையா சிவபாதசிங்கம் ஞாபகார்த்தமாக உள்ளூர் ரீதியிலான உதைபந்தாட்டப்போட்டி அண்மையில் நடைபெற்றது. நடைபெற்ற இறுதிப்போட்டி யில் அரியாலை சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை திருமகள் சனசமூக நிலைய அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 2:0 என்ற கோல் அடிப்படை யில் அரியாலை சனசமூக நிலைய அணி சம்பியன் கிண்ணத்தை சுவீக ரித்துக் கொண்டது. (க)

## இன்றைய போட்டி

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்டப்போட்டியில் இன்று சனிக்கிழமை இரவு 8.15 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## உதைபந்தாட்டம் சமநிலையில் முடிவு

இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத்தொடரின் சுப்பர்-8 ஆட்டங்களில் (8.7.2016) நடைபெற்ற விண்மீன் அணியுடனான போட்டி 1:1 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

ஞானமுருகன் சார்பாக சுபாஸ் கோலினைப்போட்டார். (க)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## பாரதி உதைபந்தாட்ட தொடர் சேவியர்,லூட்ஸ் வெற்றி

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் நடைபெற்ற முதல் போட்டியில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து விளையாடிய சென்சேவியர் அணி போட்டி முடிவில் 1:1 என்ற சமநிலையில் முடிவடைய சமநிலை தவிர்ப்பு உதையில் 4:1 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் வல்லை அணியை எதிர்த்து விளையாடிய இளவாலை சென் லூட்ஸ் 3:1 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. (க)

# மிதவேக சதுரங்க சுற்றுப்போட்டி

( பரந்தன்)

யாழ்.சதுரங்க முற்றம் நடத்தும் மிதவேக திறந்த சதுரங்கச் சுற்றுப்போட்டி நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள லொயோலஸ் மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

சுவிஸ் தமிழர் சதுரங்க ஒன்றியம், யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் என்பவற்றின் அனுசரணையுடன் நடைபெறும் இச் சுற்றுப்போட்டியானது 8 வயதின் கீழ், 10 வயதின்கீழ், 12 வயதின்கீழ், 15 வயதின்கீழ் மற்றும் திறந்த போட்டி என ஆண், பெண் என தனித் தனியாக 10 பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

7 சுற்றுக்களாக நடைபெறவுள்ள இப்போட்டியில் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கி 128 பேர் மட்டுமே பங்குபற்ற முடியும்.

பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றுநர் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் உடனடியாக நுழைவுக் கட்டணத்தினைச் செலுத்தி பதிவு செய்யுமாறும் , மேலதிக விபரங்களுக்கு போட்டி இணைப்பாளர் கா.ஆதவனுடன் (077 725 6481) தொடர்பு கொள்ளுமாறும் யாழ்.சதுரங்க முற்றத்தினர் அறிவித்துள்ளனர். (க-312)

# ஜெக்சன் சிறப்பாட்டம் சென்மேரிஸ் வெற்றி




இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட தொடரில) (09/08/2016) இமையாணன் மத்திய வி.கழக மைதானத்தில் நடைபெற்ற சுப்பர் 8 போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென் மேரிஸ் வி.க எதிர்த்து மணற்காடு சென் அன்ரனீஸ் வி.க.மோதியது.

ஆட்டம் ஆரம்பித்த முற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் சமவலுவுடன் ஆடியது. முற்பாதியாட்டத்தில் கோல் போடாத நிலையில் இரு அணிகளும் இருந்தன. பிற்பாதியாட்டத்தில் சென் அன்ரனீஸ் சிறப்பாகச் செயற்பட்ட போதிலும்சென்மேரிஸ் வீரர் ஜெக்சன் 34 ஆவது நிமிடத்தில் கோல்போட்டுஅணியை சரிவிலிருந்து மீட்டார். சென் அன்ரனீஸ் முன்கள வீரர் கோல் போடும் சந்தர்ப்பங்கள் இருந்தபோதும் மேரிஸ் பின்களம் பலமாக செயற்பட்டது. இறுதி நேர முடிவில் சென் மேரிஸ் 1:0 அடிப் படையில் சென் அன்ரனீஸை வீழ்த்தி வெற்றியீட்டியது. ஆட்டநாயகனாக சென் மேரிஸ் வீரர் ஜெக்சன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## தமிழ் அரசியல்...

மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

நிலையியல் கட்டளையின் 23/2 கீழ் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுப்பியிருந்த கேள்விகளுக்கு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு,

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகளை துரிதப்படுத்துவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைகளத்தின் சார்பில் தனிப்பட்ட அரச சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் இணைந்து சம்பந்தப்பட்ட ஆவணங்களையும், தகவல்களையும் வழங்கி வழக்குகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்நிலையில், சட்டமா அதிபரை நான் கடந்த 10ஆம் திகதி சந்தித்திருந்தேன். இச் சந்திப்பில் அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ, ரவூப் ஹக்கீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் 90 பேருக்கு பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறானவர்களுக்கு எதிரான வழக்குகளை துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தேன்.

இதன்பிரகாரம், செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையொன்றை சமர்ப்பித்து முடியுமானவர்களுக்கு எதிரான குற்றங்களைக் குறைத்து தற்போது இருக்கும் சட்டத்துக்கு அமைய வழக்குகளைத் துரிதப்படுத்தி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறியிருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னரும் அரசியல் கைதிகள் சிலருக்கு புனர்வாழ்வு வழங்கி அதன் பின்னர் விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எனினும், கைதிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அதற்கு இணங்கவில்லை.

எனவே இந்தமுறையாவது அவ்வாறு செய்யாமல், சட்டமா அதிபர் குற்றப்பத்திரங்களில் காணப்படும் குற்றச்சாட்டுக்களை குறைக்கும் பட்சத்தில், அதனை ஏற்றுக்கொண்டு புனர்வாழ்வுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு புனர்வாழ்வுக்குச் செல்வதன் ஊடாக ஒரு வருடத்தில் அந்த நபர்கள் விடுதலை பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## மீள்குடியேற்ற...

மேற்கொண்டு வருகை தந்துள்ள நோர்வே பிரதமர் எர்னா சோல்பேர்க்கிற்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனுக்குமிடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியலமைப்பின் ஊடாக தீர்வொன்றினை பெறுவது மிகவும் அத்தியாவசியம் என எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

நோர்வே பிரதமருடனான சந்திப்பில் கருத்து தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், புரிந்துணர்வை நோக்கிய பயணத்தில் இது மிகவும் முக்கியமான ஒரு படிக்கல் எனவும் அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உண்மை நிலைநாட்டப்படும் எனவும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளில் நோர்வேயின் ஆக்கபூர்வமான பங்களிப்பு தொடர்ந்தும் இருக்கும் என நோர்வேயின் பிரதமர் எர்னா சோல்பேர்க் தெரிவித்துள்ளார்

இதேவேளை, நோர்வேயின் பிரதமர் எர்னா சோல்பேர்க் நேற்று காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சர்வதேச...

விடுத்துள்ளன.

இது பற்றி அவர்கள் நேற்றுக்கூட்டாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

எதிர்வரும் 22ஆம் திகதி காலை 8.00 மணிக்கு ஆனையிறவில் ஆரம்பிக்கின்ற நடைபவனி கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை முன்பாக உள்ள ஐ.நா செயலகத்தைச் சென்றடையவுள்ளது.

தமிழர் தாயகத்தின் நயினாதீவில் 60 அடி புத்தர் சிலை வைக்கப்படடவுள்ளமை, கொக்கிளாய் கருநாட்டுக்கேணி விநாயகர் ஆலயம் இடிக்கப்பட்டு புத்த விகாரை அமைக்கப்பட்டமை, திருகோணமலை சாம்பல் தீவில் புத்த விகாரை அமைக்கப்பட்டமை,

திருக்கோணேஸ்வரம் ஆலயச் சூழல் பௌத்த மயமாக்கப்பட்டமை,

தம்புள்ளைக் காளி கோவில் இடிக்கப்பட்டமை,

கிளிநொச்சி லும்பினி விகாரைக்காகத் தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டமை,

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம் அருகே பௌத்த விகாரை அத்துமீறி அமைக்கப்படுகின்றமை,

மாங்குளம், இரணைமடுச்சந்தி, பரந்தன், கிளிநொச்சி, திருக்கேதீஸ்வரம், பூநகரி வாடியடி, கனகராயன்குளம் பெரியகுளம், கிருஸ்ணபுரம் போன்ற பகுதிகளில் அத்துமீறிப் புத்தர் சிலைகளை நிறுவிப் பௌத்த ஆக்கிரமிப்பை மேற்கொண்டு வருகின்றமை,

•மற்றும் பள்ளிக்குடா புனித தோமையர் தேவால யத்தையும் இரணைதீவு புனித அந்தோனியார் தேவாலயம் என்பவற்றைக் கடற்படை ஆக்கிரமித்தமை என்பவற்றுக்கெதிராகவும்,

மீள்குடியேற்றம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தல், இனப்படுகொலைக்கு நீதியான சர்வதேசவிசாரணையை வலியுறுத்தியும் இந்நடை பயணம் இடம்பெறவுள்ளது.

நீதி கோரும் நீண்ட நடைப் பயணத்தில் அரசியல் தலைவர்கள், மத குருமார்கள், மத அமைப்புக்கள், கிராமிய சமூக பொதுசன நிறுவனங்கள், வர்த்தகப் பெருமக்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் என அனைவரையும் ஒன்றிணைந்து வலுச்சேர்க்குமாறு கிளிநொச்சி மாவட்டக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசமும் பொது அமைப்புக்களின் ஒன்றியமும் அழைப்பு விடுக்கின்றது என சமாசத்தின் தலைவர் கறுப்பையா ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (செ-271)

## காணாமல்போனோர்...

காப்பு படையினருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமாயின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த சட்டமூலத்தை நிறைவேற்றும் போது நாடாளுமன்றத்திற்கு வந்திருக்கலாம். தனது கருத்தை அங்கு சுதந்திரமாக கூறியிருக்க லாம். குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில் கூட்டு எதிர்க்கட்சியை சேர்ந்த சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் கண்டிக்கத்தக்கது. சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், விவாதிக்க கூட்டு எதிர்க்கட்சியினருக்கு போதுமான நேரம் ஒதுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதனை பிரயோசனப்படுத்திக்கொள்ளவில்லை.

சட்டமூலத்திற்கு எதிராக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் சத்தமிடும் கூட்டு எதிர்க்கட்சியினர் குறைந்தது சட்டமூலத்திற்கு எதிராக அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்து, சட்டமூலம் நிறைவேற்றப்படுவதை தாமதப்படுத்த சந்தர்ப்பம் இருந்தது. எனினும் சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. அதிகளவான திருத்தங்களை ஜனாதிபதியே முன்வைத்திருந்தார். மேலும் சில பந்திகளை நீக்கவும் சில பந்திகளை திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் இந்தப் பணியகத்தின் மூலம் படையினர் எந்த வகையிலும் வேட்டையாடப்படமாட்டார்கள். இந்நிலையில் இவ் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானது. அத்துடன் காணாமல் போனோர் அலுவலகம் குறித்து பொய்யான பரப்புரைகளை அவர் தவிர்க்க வேண்டும். அடுத்து நடைபெறும் மனித உரிமை பேரவையின் கூட்டத்திற்கு தயாரான அரசாங்கம் என்ற வகையில் எடுக்கப்பட்ட பொருத்தமான நடவடிக்கை இதுவாகும். இவ் விடயம் சம்பந்தமான இறுதி அறிக்கை மூன்று மாதங்களுக்குள் தயாரிக்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## முதலீட்டாளர்கள்....

ஏற்படுத்திக்கொள்வதற்கான சிறந்த களமாக இந்த சம்மேளனத்தின் தொடக்க அமர்வு அமையும் என வட மாகாண ஆளுநர் ரெயினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கைத்தொழில் சுற்றுலா மற்றும் ஏற்றுமதிக்கான ஒன்றிணைந்த சேவைகளை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண ஆளுநர் ரெயினோலட் கூரே மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனின் ஆலோசனையின் கீழ் கைத்தொழில், சுற்றுலா மற்றும் ஏற்றுமதிக்கான ஒன்றிணைந்த சேவைகள் அலுவலகம் யாழ் மாவட்டச்செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆளுநர் அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்புப்பிரச்சினையை நிவர்த்தி செய்து கொள்வதற்காக முதலில் தொழில் முயற்சிகளை உருவாக்க வேண்டும். அதற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் முதலீட்டாளர் சம்மேளனத்தை உருவாக்க வேண்டும்.

இங்கு முதலீட்டாளர்களுக்கான வாய்ப்புக்கள் ஒழுங்கான முறையில் இல்லை. எனவே அவர்களின் தேவைகளை நிறைவேற்றவும் சேவைகளை பெற்றுக்கொள்ளவும் ஒரு அறையில் தமது சேவைகளை உடனடியாக பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டச்செயலகங்களிலும் காரியாலயம் அமைக்கப்படவுள்ளது. அந்தவகையில் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்துக்கான அலுவலகம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முயற்சியை மேற்கொண்ட போது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வட மாகாண முதலமைச்சர் ஆகியோர் நல்ல சமிஞ்ஞைகளை தெரிவித்தார்கள். இதன் அடிப்படையில் குறித்த அலுவலகத்தின் செயற்பாடுகள் மும்முரமாக நடைபெறவுள்ளது.

குறித்த அலுவலகத்துக்கான இலட்சனையை யாழ்.மாவட்டத்தின் முக்கிய விடயமாக உள்ள விவசாயம் மீன்பிடி உள்ளிட்ட பல துறைகளை உள்வாங்கி அமைத்துள்ளோம்.

அத்துடன் இவ் அலுவலகத்தில் முதலீட்டு அபிவிருத்திச்சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, சுற்றுலா அபிவிருத்திச்சபை, மாகாண விவசாயத்திணைக்களம், மாகாண கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்திணைக்களம், மாகாண கைத்தொழில் திணைக்களம், மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற திணைக்களங்களை சார்ந்த உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு தங்கள் சேவையை வழங்குவதற்கான வழிமுறைகள் செய்து கொடுப்பதற்கான சாதகமான பதிலை தந்துள்ளார்கள்.

மேலும் மாவட்டச் செயலகத்தில் செயற்படுகின்ற மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் கரையோர கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை போன்ற திணைக்களங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்களுடைய பங்குபற்றுதலையும் கேட்டுள்ளோம் அவர்களும் சாதகமான பதிலை தெரிவித்துள்ளார்கள். எனவே இது முதலீட்டாளர்களுக்கு முக்கிய தொடக்கமாக அமையும்.

22ஆம் திகதி நடைபெறவுள்ள அமர்வில் மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் தேசிய மட்டத்தின் சவால்கள் என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவதுடன் சிறு தொழில் வாய்ப்பு எனும் கருப்பொருளில் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி வேல்நம்பி கருத்துரை வழங்கவுள்ளார். இந்த சம்மேளனத்தில் ஆர்வமாகவுள்ள முதலீட்டாளர்களை உள்வாங்கவுள்ளோம்.

புலம்பெயர்ந்துள்ளவர்கள் இங்கு முதலீட்டை ஆரம்பிப்பதற்கு பல தடைகள் இருப்பதாக தெரிவித்துள்ளனர். முதலீட்டை செய்வதற்கு விருப்பம் இருப்பதாகவும் அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி தருமாறும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

அந்த வகையில் தற்போது நல்லூர் உற்சவம் நடைபெற்று வருகிறது. அதற்காக இங்கு வந்துள்ள புலம்பெயர்ந்தவர்களுக்கு குறித்த செய்தி சென்றடைய வேண்டும். இவ்வாறு வளங்களை ஏற்படுத்துவதன் மூலம் தொழில் துறைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே குறித்த சம்மேளனத்தின் மூலம் சிறந்த பயனை அனைவரும் பெற முடியும் என மேலும் தெரிவித்தார்.

இதன்போது முன்னாள் போராளிகளின் திடீர் மரணம் தொடர்பாக ஆளுநரின் கருத்தை ஊடகவியலாளர்கள் வினவியபோது வாய்மூலம் பல தகவல்களை அறிந்திருந்தேன்.

ஆனால், வட மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னதாகவே அது தொடர்பாக அறிந்தேன். இது தொடர்பாக என்னிடம் ஆதாரங்களுடன் தெரியப்படுத்தினால் அதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுப்பேன். வட மாகாண சபையில் இந்த விடயம் பேசப்பட்டுள்ளமையினால் அது ஜனாதிபதியின் கவனத்திற்கு செல்வதற்கும் வாய்ப்புள்ளது என தெரிவித்தார். (செ-9)

## தங்கவேட்டையில்...

வேக நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ்.

இதன்மூலம் 2168 வருட கால ஒலிம்பிக் சாதனையும் அவரால் தகர்த்தெறியப்பட்டது.

நீச்சல் உலகின் முடிசூடா மன்னன் அமெரிக்காவின் மைக்கல் பெல்ப்ஸ் (வயது - 31). கடந்த 2004 எதன்ஸ் ஒலிம்பிக்கில் 6 தங்கம் வென்ற இவர், 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் 8 தங்கம், 2012 லண்டன் ஒலிம்பிக்கில் 4 தங்கம் என மொத்தம் 18 தங்கம், தலா 2 வெள்ளி, வெண்கலம் என 22 பதக்கங்கள் வென்றிருந்தார்.

இதன்பின் ஓய்வு அறிவித்த இவர், மீண்டும் ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க முடிவு செய்தார். தற்போது ரியோவில் அசத்தி வரும் இவர், முதலில் 200 மீ., 'பட்டர் பிளை', 4X200 மீ., மற்றும் 4X100 மீ., 'பிரீஸ்டைல் ரிலே' போட்டிகளில் தங்கம் வென்றார்.

நேற்று முன்தினம் 200 மீ., தனி நபர் 'மெட்லே' பிரிவில் அசத்திய இவர், பந்தய தூரத்தை ஒரு நிமிடம் 54.66 வினாடியில் வந்து ஒலிம்பிக் வரலாற்றில் 22ஆவது தங்கம் வென்றார்.

தவிர, இப்பிரிவில் தொடர்ந்து நான்காவது முறையாக தங்கப்பதக்கம் வென்று சாதித்தார். இதற்கு முன், அமெரிக்காவின் அல் ஓயர்டெர் (வட்டு எறிதல்), கார்ல் லூயிஸ் (நீளம் தாண்டுதல்) என இருவர் மட்டுமே ஒரே போட்டியில் தனிநபர் பிரிவில் தொடர்ந்து நான்கு முறை தங்கம் வென்றனர்.

### மீண்டும் தங்கம்?

200 மீ., போட்டி முடிந்து தங்கம் வாங்கிய அடுத்த சில நிமிடங்களில், பெல்ப்ஸ் 100 மீ., 'பட்டர்பிளை' அரையிறுதி போட்டியில் பங்கேற்றார். இதில் பந்தய தூரத்தை 51.58 வினாடியில் கடந்து 2ஆவது இடம்பிடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இப்பிரிவுக்கான இறுதிப்போட்டி இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 6.42 நடைபெறுகிறது. இதில் இவர் அசத்தும் பட்சத்தில் 23ஆவது தங்கப் பதக்கத்தை சுவைக்கலாம்.

### 2168 வருட சாதனை தகர்ப்பு

கிறிஸ்து பிறப்பதற்கு முன் கி.மு. 152-ல் லியோனிதாஸ் கிரேக் போட்டியில் படைத்த சாதனையையே பெல்ப்ஸ் முறியடித்துள்ளார். (செ)

# ஜெயக்குமாரிக்கு...

இதன்படி எதிர்வரும் 16 ஆம் திகதி பயங்கரவாத குற்றத்தடுப்பினரின் அலுவலகத்திற்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த ஜெயக்குமாரி வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டதுடன் கடவுச்சீட்டும் முடக்கம் செய்யப்பட்டிருந்தது.

அதேநேரம் ஜெயக்குமாரி கைது செய்யப்பட்டபோது அவருடைய அடையாள அட்டை, வங்கிப்புத்தகம் உள்ளிட்ட ஆவணங்களையும் பொலிஸார் பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் மீண்டும் ஜெயக்குமாரி விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளமை மனிதவுரிமை செயற்பாட்டாளர்களிடையே பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

மேலும் ஏற்கெனவே ஜெயக்குமாரி மீது பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டான விடுதலைப்புலிகளை மீளுருவாக்கும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்தார் என்பது தொடர்பிலேயே இந்த விசாரணையும் முன்னெடுக்கப்பட உள்ளதாக அறிய முடிகின்றது.(செ-4)


## வீடு விற்பனைக்கு

- பலாலி வீதி கோண்டாவில் சந்தி வன்னியசிங்கம் வீதியில் 2 1/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
- பலாலி வீதி திருநெல்வேலியில் 10 பரப்பு காணி மொத்தமாகவும் துண்டுகளாகவும் விற்பனைக்கு உண்டு.
- கே.கே.எஸ் வீதி கொக்குவில் கிழக்கில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 167 1174
077 728 6061

2016 தரம் 5 மாணவர்களுக்கான

## இறுதிப் பரீட்சையும் வழிகாட்டல் கருத்தரங்கும்

இடம் :- புதிய நாவலர் கல்வி நிலையம். பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
காலம் :- 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை.
காலை 9.00 மணி - மாலை 3.00 மணிவரை

புலமை அரும்பு, புலமைச்சிட்டு, புகழ் ஆகிய வெளியீட்டு வளவாளர்கள்,
திரு.மனோ - சுரேஸ்
(முன்னாள் ஆசிரியர் கொழும்பு றோயல் கல்லூரி)
திரு.லோ.விஜேந்திரன்
(ஆசிரியர் :- யா/உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை)
(C-5433)

- முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் முழு மாதிரி வினாத்தாள்.
- வினாக்களுக்கு விடையளிக்கும் இலகுவான முற்று முழுதான விளக்கம்.
- பதிவுகளை இன்றும் நாளையும் நேரிலோ அல்லது 0774598440 என்ற தொலைபேசி எண்ணூடாக பதிவு செய்து கொள்ளலாம்.


# காணாமல் போ...

இந்த நடவடிக்கை நல்லிணக்கத்தை நோக்கி எடுத்து வைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய தடம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று, காணாமல்போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டமூலம் இலங்கையின் ஒரு வரலாற்று நகர்வு என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனிதவுரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரொம் மாலினோவ்ஸ்கி தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் இலங்கை மக்கள் அனைவருக்கும் இது ஒரு வரலாற்று ரீதியான மைல்கல் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


## தேவை

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்திக்கு அருகில் உள்ள உயர்தர Pizza Restaurant இல் கீழ்வரும் பகுதிகளுக்கு உடனடியாக (ஆண், பெண் இருபாலாரும்) தேவை

- சமையல் உதவியாளர் (Kitchen Helper)
- உணவு பரிமாறுபவர் (Waiter)
- உணவு விநியோகிப்பவர் (Delivery Boy)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
076 682 9000
077 480 3840
(சி-5436)

## அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK - 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226240
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
- நெல்லியடி • வல்வெட்டித்துறை

V2 TRAVELS


# மகிந்த அணி ஆர்ப்...

கடந்த காலங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக அமைக்கப்படவுள்ள காணாமல் போனோர் தொடர்பான பணியகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் நேற்றைய தினம் நாடாளுமன்ற வளாகத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்பு போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியிலிருந்து 11.30 வரை முன்னெடுக்கப்பட்டதோடு, இதில் பௌத்த பிக்குகள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

காணாமல்போனோர் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காக தனியான பணியகமொன்றை அமைப்பதற்கான சட்டமூலம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் கறுப்பு பட்டிகளை அணிந்து சபையில் கலகத்தை ஏற்படுத்திய போதிலும் எதிர்ப்புக்களை மீறி குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இராணுவத்தினரை பலிகொடுப்பதற்காகவும், புலம்பெயர் தமிழ் சமூகம் மற்றும் மேற்குலக நாடுகளின் சூழ்ச்சிகள் வெற்றிபெற வழியமைத்துக் கொடுக்கும வகையிலும் இந்தப் பணியகம் அமைக்கப்படுவதாகக் கூறி அதற்கெதிராக நேற்றைய தினம் கவனயீர்ப்பு எதிர்ப்பு போராட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையில் நடைபெற்றது.

இந்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, காணாமல் போனோர் தொடர்பான பணியகத்தை அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்று சூளுரைத்தார்.

அங்கு மேலும் கூறுகையில்,

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தி நாட்டு மக்களிடம் சத்தியப் பிரமாணமொன்றை செய்திருந்தார். அதாவது, இந்த சட்டத்தின் ஊடாக இராணுவத்தினருக்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது என்றும், அவ்வாறு இடம் பெறுவதற்கும் இடமளிக்கமாட்டோம் எனவும கூறியிருந்தார்.

துரதிஷ்டவசமாக வெளிவிவகார அமைச்சர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருக்கையில் பிரதமர் இந்த சட்டமூலத்தை முதலாம் வாசிப்பிற்காக சபையில் சமர்பித்திருந்ததினால் இதிலுள்ள விடயங்களை படித்துப் பார்ப்பதற்கு மங்கள சமரவீரவுக்கு நேரம் கிடைத்திருக்கவில்லை. எனவே இந்த சட்டம் நிச்சயமான இராணுவத்தினருக்கு எதிராக கொண்டுவந்தது என்பதை நிரூபிப்பதற்கு விவாதமொன்றுக்கு வருமாறு மங்கள சமரவீரருக்கு நான் சவால் விடுக்கின்றேன்.

தாருஸ்மன் அறிக்கை மற்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன் மனித உரிமைகள் பேரவையில் சமர்பித்திருந்த அறிக்கையின் 36 தொடக்கம் 39 ஆவது பரிந்துரைகளில் இலங்கையில் இவ்வாறான பணியகமொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும், தங்களுக்கு திருப்தி ஏற்படக்கூடிய வகையில் இலங்கைக்குள் இராணுவத்தினரை தண்டிக்காவிடின் பொதுச் சபை ஊடாக விசேட போர்க் குற்ற நீதிமன்றம் அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டே காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவை கலைத்துவிட்டு நாடாளுமன்ற அதிகாரம், நீதிமன்ற அதிகாரம், பொலிஸ் அதிகாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய காணாமல போனோர் பணியகத்தை எமது நாட்டு நாடாளுமன்றத்தின் ஊடாக அமைத்திருக்கின்றோம் என்பதை தெரிவிக்கின்றோம்.

சட்டத்தின்படி பார்த்தால் நேற்று முன்தினம நாடாளுமன்றில் அந்த சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை. சட்டவிரோத பணியகத்தை அமைப்பதற்த அரசாங்கத்திற்கு நாம் இடமளிக்க மாட்டோம். காணாமல்போனோர் தொடர்பில்விசாரணை செய்வதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். எனினும் எமது நாட்டில் பொலிஸ், நீதிமன்றம், சட்டமா அதிபர், சுயாதீன ஆணைக்குழுக்கள் உள்ள நிலையில், ஏன் இவ்வாறு விசேட பணியகம் அமைக்கப்படுகிறது என்ற கேள்விக்கு அரசாங்கத்திடமிருந்து இதுவரை பதில வரவில்லை.

சுனாமி பேரழிவில் பலர் காணாமல் போயினர். 88, 89ஆம் ஆண்டுகளிலும் காணாமல் போனார்கள். அவர்கள் தொடர்பில் நாட்டிலுள்ள சட்டத்திற்கு அமைய விசாரணை செய்து நியாயத்தைப் பெற்றுக்கொடுத்தார்கள். எனினும் இந்த பணியகம் அமைத்தலுக்குப் பின்புலனில் அமெரிக்காவும், தமிழ் பிரிவினைவாதிகளுமே உள்ளனர். இவர்களது உதவியில் ஆட்சிபீடம் ஏறிய இந்த பொம்மை அரசாங்கம் அமெரிக்காவின் தாளத்திற்கு நடனமாடுவதை தவிர வேறு வழியில்லை என உதய கம்மன்பில தெரிவித்தார். (செ-11)


# MAAAS Engineering Enterprises



MAAAS Engineering Enterprises is a C5 Company in building and High Way. It has incorporated in 4th November 2004 as Sairam Contractors for providing quality building construction and engineering services. We have done several construction works for government and private sector clients in Northern and Eastern Provinces.

## Vacancy

- Construction Manager / Senior Technical Officer.

The suitable candidate should be able to plan and monitor the progress of the projects and able to manage the official correspondence with clients.

Qualifications: NCT in Civil Engineering or HND in Civil Engineering/ partly qualified.
Experience: Minimum 2 years in field.
Age : should be 30-45 years.
Salary : Attractive remuneration will be paid.
(5601)

If you fit the above profile, you may send your CV with the details of two non related referees to maaasengineeringenterprises@gmail.com on or before 17th of August.

MAAAS Engineering Enterprises, NO. 26B, Brown Road, Jaffna. T.P: 0212220434

## உடனடியாகத் தேவை

- மேசன்
- லேபர்
- வெல்டிங் (Sub Contractor)



கதிர் ஒப்பந்த நிறுவனத்திற்கு மேற்கூறப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பப்படுகின்றனர்.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (5599)
K.K.S Road, Chunnakam.
T.P: 077 241 7103, 021 561 8129

## அன்னை முத்துமாரி பஸ்சேவை

கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை

12ம் திகதி முதல் பகல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது




நான்கு புதிய A/C பஸ்களுடன்

இரு வழிச் சேவையை இரவு, பகல் என விஸ்தரித்துள்ளது

Web www.annaimuthumari.com www.valvaitourism.com

| | |
|---|---|
| Colombo | +94 77 544 9251 |
| Jaffna | +94 77 544 8503 |
| Nelliyadi | +94 77 285 0285 |
| Pointpedro | +94 77 555 2973 |
| Valvettithurai | +94 21 226 1977 |
| | +94 77 544 7359 |

| | காலை | இரவு |
|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 am | 7.00 pm |
| யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00 pm |
| வெள்ளவத்தை | 7.30 am | 7.30 pm |
| கொட்டஹேனா | 8.30 am | 8.30 pm |

(5552)

Bus booking || Courier || Boating

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.